# பாதுகாவலன்

PATHUKAVALAN


**காவலன் விநியோகம்**

| | |
|---|---|
| ஆனைக்கோட்டை | 135 |
| சுன்னாகம் பங்கு | 125 |
| வங்காலை பங்கு | 123 |
| செக்கடித் தெரு பங்கு | 126 |
| கொட்டாஞ்சேனை பங்கு | 116 |
| புதுக்குடியிருப்பு பங்கு | 112 |
| கிளிநொச்சி பங்கு | 100 |
| இரணைதீவு பங்கு | 96 |
| மிருசுவில் பங்கு | 91 |
| நாவாந்துறை பங்கு | 80 |
| நெடுந்தீவு பங்கு | 80 |
| மானிப்பாய் பங்கு | 75 |


மலர்: 115 இதழ்: 19 12–5–1989 (மே 12 — மே19) ரூபா 1-50 இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு



RECEIVED ... Periodicals Division ... Library


மறை அறிவிப்புப் பணிக்கான தேசிய ஆணைக்குழு விடுத்துள்ள 'வெசாக்' தினச் செய்தி:

# சகிப்பு, காருண்யத்தை குறிக்கும் வெசாக்

# அமைதி, ஒற்றுமைக்கு வழிகோலட்டும்

**பௌத்த சகோதரர்களுக்கு இலங்கைக் கிறிஸ்தவர்கள் சார்பாக வெசாக் வாழ்த்துத் தெரிவித்துள்ள மறை அறிவிப்புப் பணிக்கான தேசிய ஆணைக் குழுவின் தலைவர் பேரருள்திரு எட்மன் பெர்ணண்டோ ஈஸ்டருக்கும் வெசாக் கிற்கும் உறவு உண்டெனக் கூறி வன்முறையால் சிதைவுண்ட நாட்டில் சாந்தி உண்டாக வாழ்த்தியுள்ளனர்.**

மே 20 வெசாக் தினத்தை முன்னிட்டு இம்மாதம் 2 ஆம் திகதி மறை அறிவிப்புப் பணிக்கான தேசிய ஆணைக்குழுத்தலைவர் பேரருள்திரு.எட்மன் பெர்ணண்டோ. ஆண்டகை விடுத்துள்ள செய்தியில் "எமது பௌத்த சகோதரர்களுக்கு இலங்கை கிறிஸ்தவர்கள் சார்பாக நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஈஸ்ரர் விழாவில் நினைவு கூரப்படும் கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்புக்கும் வெசாக்கிற்கும் இருக்கக்கூடிய தொடர்பைச் சுட்டிக்காட்டி, பௌத்தரின் பண்டிகையில் கிறிஸ்தவர்களும் பங்கு கொள்ள முடியும் என ஆயர் கேட்டுக்கொண்டுள்ளார்.

வன்முறை, பிரிவினை என்பவற்றால் சிதைவுபட்டுள்ள எமது நாடு வெசாக் குறிக்கும் சகிப்புத்தன்மை, காருண்யம் என்பவற்றினால் அமைதியையும் சாந்தியையும் பெற்றுக் கொள்ள ஆசிக்கின்றது. பௌத்த சங்கமும், பௌத்தரும் இவற்றைக் கடைப்பிடிக்க இந்த வெசாக்பண்டிகை தகுந்த தருணமாக அமையட்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## கத்தோலிக்க பல்கலைக்கழக ஒன்றியத்தில் பிறமதத்தவர்

அனைத்திந்திய கத்தோலிக்க பல்கலைக்கழக ஒன்றியம் சகல மதங்களையும் சேர்ந்த பல்கலைக் கழக மாணவருக்கு அங்கத்துவம் அளிக்கவிருக்கின்றது.

ஒன்றியத்தின் யாப்பில் இதற்குரிய திருத்தங்களைக் கொண்டுவர இரண்டு வருடங்களாக ஆயத்தங்கள் செய்யப்பட்டு வருகின்றன. சமுதாயத்தின் தேவைகளை யொட்டி இந்த ஒன்றியத்தை பல்கலைக் கழக மாணவர்களின் மாபெரும் இயக்கமாக்கும் பொருட்டே இம்மாற்றம் கொண்டுவரப்பட்டுள்ளதாக திருத்த ஆணைக்குழுவின் தலைவரான பிதா மனுவல் அல்பொன்ஸஸ் தெரிவித்தார்.

இந்த இயக்கமானது சகல மதங்களையும் சேர்ந்த மாணவர்களையும் ஒன்றுதிரட்டி சமுதாயத்தில் வலிமை குறைந்தவர்களுக்காகப் பாடுபட்டு, நீதியும் அமைதியும் நிறைந்த உலகைக் கட்டியெழுப்பும் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

திருச்சி சூசையப்பர்கல்லூரியில் 1924-ல் ஆரம்பித்த கத்தோலிக்க மாணவர் ஒன்றியம் இந்தியாவிலுள்ள ஏனைய கத்தோலிக்க கல்லூரிகளுக்கும் பரவி1937-ல் தென்னிந்திய கத்தோலிக்க பல்கலைக்கழக ஒன்றியம் எனப் பெயர் பெற்றது.

1949-ல் அது அனைத்திந்திய பரிமாணத்தைப் பெற்றது. பின்னர் இது அனைத்துலக கத்தோலிக்க மாணவர் இயக்கத்துடன் இணைக்கப்பட்டது.

## உலக தொடர்பு சாதன தினத்தில் கிறிஸ்தவ ஆக்கங்களுக்குப் பரிசு

ஆண்டு தோறும் சிறந்த சிங்கள கத்தோலிக்க இலக்கியத்திற்கு அளிக்கப்படும் பொற்பேனு பரிசும், சிறு கதைப் போட்டியும் இவ்வாண்டு உலக தொடர்பு சாதன தினத்தின் அம்சங்களாக அமையும்.

அகில உலக கத்தோலிக்க எழுத்தாளர் சங்கத்தின் இலங்கைக் கிளை, எழுத்தாளர், ஏனைய தொடர்பு சாதனங்களில் ஈடுபட்டோரின் ஒன்றுகூடலின்போது இப்பரிசளிப்பை நடத்தும்.

கொழும்பு துணை ஆயரும், இம்மன்றத்தின் புரவலருமான பேரருள்திரு. ஒஸ்வால்ட் கோமிஸ் அவர்களின் ஆதரவில், 'ஞானர்த்த பிரதிபய' என்னும் கத்தோலிக்க வார இதழ் சிறுகதைப் போட்டியை நடத்துகின்றது. இப்பரிசுத் திட்டம் 23 ஆண்டுகளுக்கு முன் இவரால் ஆரம்பிக்கப்பட்டது.

சிலாப ஆயர் பிராங் மார்க்கஸ் பெர்ணன்டோ அவர்களே இப்பரிசை முதன் முதல் பெற்றவர், சென்ற ஆண்டில் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனக் கலைஞரான கே. பிரான்ஸிஸ் என்பவருக்கு இப்பரிசு வழங்கப்பட்டது.

1988-ல் இம்மன்றம் ஒரு சிங்கள இலக்கியத் தொகுப்பையும், கவிதைத் தொகுப்பையும் வெளியிட்டது.

ஏறக்குறைய 200 கத்தோலிக்க எழுத்தாளர்கள் இம்மன்றத்தில் அங்கத்துவம் வகிக்கின்றனர்.

## குடும்ப சேவை நிலையத்தின் பணி

சிலாப மறைவட்டத்தின் குடும்பநல சேவை நிலையம் பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் ஆலோசனை கூறுவதன்மூலம் குடும்பங்களுக்கு நற்பணி ஆற்றிவருகிறது. இங்குள்ள குடும்ப நீதிமன்றம் மாதத்துக்கொரு குடும்ப சச்சரவையாவது இந்நிலையத்திற்கு அனுப்புகின்றது. 50 வீதமான குடும்பங்களில் மீண்டும்ஒற்றுமைஏற்பட்டுள்ளதாக நிலையத்தின்இயக்குநர்பிதாஇம்மானுவல் பெர்ணன்டோ தெரிவிக்கிறார்.

இந்நிலையம் 1983இல் ஆயர் பிராங் மார்க்கஸ் பெர்ணன்டோவினால் ஆரம்பிக்கப்பட்டது. இளைஞருக்கும், விவாகம் செய்ய ஆலோசித்திருக்கும் ஜோடிகளுக்கும், மணமான தம்பதியருக்கும் வாழ்க்கைத் துறையில் கல்வித் திட்டங்களை இந்நிலையம் நடத்திவருகிறது. கற்பிட்டிய, மாதம்பே, மாரவில, புத்தளம், வென்னப்புவ ஆகிய இடங்களில் இதன் கிளைகள் செயலாற்றிவருகின்றன.

இந்நிலையம் நடத்திவரும் திருமண ஆயத்த நெறியில் எல்லா மண மக்களும் பங்குபற்றவேண்டும். கிறிஸ்தவ கோட்பாடு, உளவியல், சமூகவியல், பாலியல், இயற்கை முறை குடும்பக் கட்டுப்பாடு ஆகியன இந்நெறியில் அடங்கும்.

"பாரம்பரிய குடும்ப முறைகள் தற்போது சிதைவுற்று வருவதால் எதிர்காலக் குடும்பங்களில் நாம் கூடிய கவனம் செலுத்தவேண்டியுள்ளது" என பிதா பெர்ணன்டோ குறிப்பிடுகிறார்.

இந்நிலையம் இளைஞர்களுக்கும் பல நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தி இளைஞருக்கும் பெற்றோருக்குமுள்ள பிரச்சினைகளையும் ஆராய்கிறது, கத்தோலிக்கருக்கு மட்டுமன்றி பிறமதத்தினர்க்கும் இந்நிலையம் உதவி வருகிறது.

## பொமிகோல் சுவாமி காலமானர்



போலந்தில் காலமான அருள்திரு பொமிகோல் சுவாமியின் ஆன்ம இளைப்பாற்றிக்காக மே 8 திங்கள் மாலை 4-30 மணிக்கு யாழ். ஆயர் தலைமையில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

1931 ஜூலை 2ல் போலந்தில் குருவாக திருநிலைப்படுத்தப்பட்ட அவர் ஒக்ரோபர் 1934-ல் யாழ். மறைவட்டத்தில் பணிபுரிய வந்தார்.

வவுனியா, முல்லைத்தீவு, பேசாலை, யாழ். சென் ஜேம்ஸ், இளவாலை, மன்னார், இளவாலை சென் ஜேம்ஸ் பங்குகளில் பணியாற்றி 1968இல் தாயகம் திரும்பிய அருள்தந்தை அவர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு முன் தன் தாய்நாட்டில் உயிர் நீத்தார். அவரது இறப்புப் பற்றிய செய்தி வெகு தாமதமாகவே இங்கு தெரிந்து கொள்ளப்பட்ட போதிலும் அவரது இறப்புப்பற்றிக் கேள்விப்பட்டு பலர் தம் அனுதாபங்களைத் தெரிவித்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்

# எம்கருத்து

## ஊக்குவிப்பு

இம்மாதம் 7 ஆம் திகதி நினைவுகூரப்பட்ட 23 ஆவது உலக சமூகத்தொடர்பு தினத்துக்கான திருத்தந்தையின் செய்தியில் ''சமூகத்தொடர்பு சாதனங்களோடு தொடர்புடைய அனைவரும் பிற கிறிஸ்தவ சபைகள், பிற மதத்தவர்களையும் தம்மோடு இணைத்துக் கொள்ளவேண்டியதன் அவசியத்தை ஆராயவேண்டும்'' என்று திருத்தந்தை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எமது பத்திரிகையின் தரம் உயர முடியாமைக்கு ஒரு முக்கிய காரணி அது கத்தோலிக்கர் சார்ந்த வட்டத்துக்குள் சிறைப்பட்டிருப்பதாகும்.

திருச்சபையோடு தொடர்பில்லாத உலகச் செய்திகளை எமது பத்திரிகை தனதாக்கிக்கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டால் நிச்சயம் தரம் உயரவும், விநியோகம் பெருகவும் வாய்ப்புக்கள் அதிகரிக்கும்.

ஆனால் நாம் அவை பற்றி இப்போதைக்கு சிந்திக்கப்போவதும் இல்லை. அத்தகைய முயற்சியில் ஈடுபடப்போவதும் இல்லை. இன்னும் பல ஆண்டுகள் சென்றாலும் அது நடைபெற நாம் இடமளிக்கவும் மாட்டோம்.

திருச்சபையுடன் தொடர்பில்லாத செய்திகளை நமக்குத்தர பிற பத்திரிகைகள் போட்டியிடுகையில் நாம் அந்த முயற்சிக்குள் இறங்கவேண்டிய அவசியம் இப்போதைக்கு இல்லை.

முரசொலி, உதயன், வீரகேசரியுடன் ஒப்பிடும்போது எமது பத்திரிகை கவர்ச்சி அற்றதாகத் தென்பட்ட போதிலும், எமது நோக்கம், விடயங்கள் இவற்றை மனத்தில் கொண்டு எமது பத்திரிகையை நோக்கும்போது இதற்கு நிகராக வேறு எப்பத்திரிகையும் தமிழில் இல்லை என்பது தெட்டத்தெளிவு. அத்தகைய வேறு ஒரு பத்திரிகை தமிழில் இருந்தால் அதனுடன் ஒப்பிட்டு எமது தரத்தைச் சீர்தூக்கிப் பார்க்கக் கூடியதாக இருக்கும். இலங்கையில் வெளிவரும் பிற மொழி கத்தோலிக்க பத்திரிகைகளுக்கு (ஆங்கிலம், சிங்களம்) இணையாக எமது பத்திரிகை இருப்பதை பல மதப்பிரமுகர்கள் குறிப்பிட்டுக்காட்டியுள்ளனர்.

திருச்சபையின் கையில் உள்ள தொடர்புச்சாதனங்கள் சரிவரப்பயன்படுத்தப்படவேண்டும் என்றும், மக்களுக்கு நம்பிக்கையின் செய்தியையும், இறைவனோடு ஒப்புரவாகுதலையும் பற்றி அறிவிக்கவேண்டும் என்றும், அவற்றிற்காக சிறந்த தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தவேண்டும் என்றும் திருத்தந்தை கேட்டுக்கொண்டுள்ளார்.

இத்தகைய முயற்சியில்நாம் ஓரளவுக்கு ஈடுபட்ட போதிலும், முற்றும் முழுதாக அவற்றைக் கடைப்பிடிக்கிறோம் என்று கூற முடியாது.

அச்சுத்துறையும், பிற சமூகத்தொடர்புச்சாதனங்களும், தொழில் நுட்ப ரீதியாக வளர்ச்சியடைந்துள்ளபோதிலும்; அத்தகைய கருவிகள் பயன்படுத்தப்படும்போது உற்பத்தியில் பெருக்கம் இல்லை என்றால் தனி நபர்கள் அவற்றை அனுபவிக்க அதிக செலவு செய்யவேண்டிய நிலைமை ஏற்படும். ஆயிரம் பிரதிகளுக்கு முதலிடும்போது ஒரு பிரதியின் விலை 25 ஆயிரம் பிரதிகளில் ஒரு பிரதியின் விலையிலும் பன்மடங்காக இருக்கும். ஆகவே அத்தகைய கருவிகளை நாம் உபயோகிக்கு முன் பத்திரிகை விநியோகத்தை பன்மடங்காக்க வேண்டியுள்ளது.

திருச்சபை சார்ந்த செய்திகளை மட்டும் தாங்கி வரும்பத்திரிகையின் விநியோகம் பெருக வேண்டுமென்றால் அவை ஊக்குவிப்பினாலே மட்டும் தான் நிறைவேற முடியும் இந்த ஊக்குவிப்பு பங்குமட்டங்களிலே நடைபெற வேண்டும்.

பரம்பரைப் பாதுகாவலன் வாசகர்கள் தொடர்ந்தும் பாதுகாவலன் வரவேண்டும் என்று உறுதிசெய்வதால் மட்டுமே சில பங்குகளில் பாதுகாவலன் இன்னும் விற்பனையாகிக் கொண்டிருக்கிறது. அவர்களும் இல்லாவிட்டால் அப்பங்குகளுக்கு பாதுகாவலன் நிறுத்தப்பட வேண்டிய பரிதாப நிலை ஏற்படலாம். நாம் உங்களுக்கு அறியத்தருகின்றதுபோல சில பங்குகள் ஆர்வம் காட்டிவருகின்றமை தெளிவு. பக்திச்சபைகளும் எல்லாப் பங்குத்தந்தையர்களும் உண்மையாகவே முயற்சி எடுத்தால்...?

# கிளிநொச்சி மறைவட்ட வேதாகம கருத்தரங்கு

கிளிநொச்சி சென்திரேசா மகாவித்தியாலயத்தில் கிளிநொச்சிப் பங்குத்தந்தை அருள்திரு இருதயதாஸ் அடிகளின் வழிநடத்துதலில், ஏப். 28 ஆம், 29 ஆம், 30 ஆம், திகதிகளில் நடைபெற்ற வேதாகம கருத்தரங்கில் 7 பயிற்றப்பட்ட மறையாசிரியர்கள் உட்பட 28 சகோதர சகோதரிகள் பங்குபற்றினர். 28-4-89 வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு வழிபாடு திரு. ஜெயசீலன் அவர்களால் நடத்தப்பட்டு பின் அறிமுகம், வரவேற்பு, குழுப் பிரித்தல் ஆகியன இடம் பெற்றது. திரு. சவுந்தரநாயகம் அவர்கள் தனி மனிதன் வாழ்வில், சமூகவாழ்வில் ஏற்படும் பிரச்சனைகள் பற்றி அலசி ஆராய்ந்தார். 8-30 மணிக்கு இரவு வழிபாடு நடைபெற்றது.

29 ஆந்திகதி சனிக்கிழமை திரு. ஆரோக்கியநாதன் அவர்களால் காலை வழிபாடு நடத்தப்பட்டது. மு. ப, 8-30 மணிக்கு மறைக்கல்வி நிலைய இயக்குனரான அருள்திரு ஆர். எம். ஜி. நேசநாயகம் ''இறைவார்த்தை ஆற்றல் மிக்கது.'' என்பது பற்றி உரை நிகழ்த்தினர். திரு சவுந்தரம் அவர்கள் வேதாகமம் என்றால் என்ன என்பதைப் பற்றி அறிமுகம் செய்து வைத்தார். திரு. ஆராக்கியநாதன் [ம. ஆ] அவர்கள் குலமுதுவர்கள் யார்? அவர்கள் என்ன செய்தார்கள் என்பது பற்றி கூடிய விளக்கம் கொடுத்து உரைநிகழ்த்தினர். திரு. பங்கிராஸ் அவர்கள் அரசர்கள், நடுவர்கள் என்பது பற்றி உரை நிகழ்த்தினர். திரு. அந்தோனிப்பிள்ளை அவர்கள் இறைவாக்கினர் என்றால் யார் என்பதைப் பற்றி உரை நிகழ்த்தினர். ஒவ்வொரு உரைகளின் பின்னும் குழு ஆய்வு இடம் பெற்றது. 7-30 மணிக்கு இரா வழிபாட்டுடன் அருள் தந்தை நேசநாயகம் அடிகளால் '' அழைக்கப்பட்டேன் அனுப்பப்பட'' என்ற மையப் பொருளுடன் திருப்பலியும் நடைபெற்றது.

30 ஆந்திகதி ஞாயிற்றுக் கிழமை காலை வழிபாடும் அருள்திரு இருதயதாஸ் அடிகளால் திருப்பலியும் இடம் பெற்றது. அங்கு சென்ற சகோதர சகோதரிகள் சார்பிலும் யாழ். மறைமாவட்டத்தில் இருந்து வந்த தந்தைக்கும் மற்ற மறை ஆசிரியர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து திருப்பலியை முடித்துக் கொண்டார். பின் 8-30 மணிக்கு திரு. பங்கிராஸ் இறைவாக்கின் நிறைவேற்றம் பற்றி உரை நிகழ்த்தினர். திரு ஜெயசீலன் இறையரசின் தொடர்ச்சி பற்றி உரை நிகழ்த்தினர். இறைவார்த்தை வாழ்வோம் என்ற வேதாகம வார்த்தைகள் உள்ளத்தில் ஊடுருவியதால் மனத்திடனையும் மன வலிமையையும் அடைந்தோம் என்ற நம்பிக்கையுடன் சகோதரி மறையாசிரியர் எல்லார் சார்பிலும் நன்றியுரை சொன்னர். நேசத்தந்தை அவர்களும் சவுந்தரம் அவர்களும் நன்றியுரை வழங்கினர். பின்னர் வேதாகம கருத்தரங்கு இனிதே முடிவடைந்தது.

தகவல் :-
மறை ஆசிரியர்
செல்வி. அந்தோனிப்பிள்ளை
ஞானமலர்.
குமரபுரம், பரந்தன்.

# நுவரெலியா ஒலிபண்ட் தோட்ட முதல் விழா

நுவரெலியாப் பங்கைச் சேர்ந்த ஒலிபண்ட் தோட்டத்தில் அமைந்துள்ள கிறிஸ்து அரசர் ஆலயத்திருவிழா முதன் முறையாக அப்பங்கு மக்களால் சித்திரைத் திங்கள் 15 ஆம் நாள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பங்குத்தந்தை அருள்திரு. கிங்ஸ்லி சில்வா அடிகளாரினால் 10 ஆம் திகதி கொடி யேற்றப்பட்டதுடன், இவ்விழா நவநாட்கள் ஆரம்பமாகின. நுவரெலியா மறைக்கல்வி நடுநிலைய இயக்குனரும். உதவிப்பங்குத்தந்தையுமான அருள்திரு. நேரியோ ஏபிரகாம் அவர்களினால், திருவிழாவைக் கருத்துள்ள முறையில் கொண்டாடுவதற்கு பல ஆயத்தங்கள் செய்யப்பட்டன. இறைமக்களின் விசுவாசத்தை ஆழப்படுத்தும் வகையில் சிறப்பான மறையுரையுடன் நவநாட்கள் அருள்திரு. யோகேஸ்வரன் பாலா, இராஜேந்திரன் ஆகியோரால் நடத்தப்பட்டது. நுவரெலியா மறைக்கல்வி நடுநிலையத்தின் விசேட நிகழ்ச்சிகளாக கொடியேற்ற நாளிலிருந்து படக்காட்சிகளும், 11-ம் திகதி திருமணமானவர்களுக்குக் கருத்தரங்கு திரு. திருமதி பீட்டர் தம்பதிகளாலும், அருள்திரு. யோகேஸ்வரன் ஆகியோராலும் நடத்தப்பட்டது. முன்னாள் கண்டி ஆயர் போல் பெரேரா ஆண்டகை அவர்களால் 14 ஆம் திகதி மாலை திருப்பலிப்பூசையும், நற்கருணை ஆசீர்வாதமும், 15 ஆம் திகதி திருவிழாப்பலியுடன் உறுதிப்பூசுதலும் நிறைவேற்றப்பட்டது. ஆயர் தமது மறையுரையில் ''பெரும்பான்மையாக பிற சமய மக்கள் வாழும் இத்தோட்டத்தில் நீங்கள் சிறந்த உதாரணமாகவும் ஒளியாகவும், உப்பாகவும் விளங்க வேண்டும்'' எனக் குறிப்பிட்டார். திருச்சுரூபம் பவனியாக பங்குமக்களால் எடுத்துச்செல்லப்பட்டது. அருள்சகோதரிகள் ஜெபசீலி, நியோமி, பெபெச்சுவா அவர்களின் அயராத உழைப்புடன், சகோதரி செபமாலை மேரியின் விடாமுயற்சியுடன் இவ்விழா அர்த்தமுள்ள விழாவாக முடிவுற்றது.


அல்லேப்பிட்டி

**பிலிப்நேரியார் ஆலய திருவிழா**

17-5-89 மாலை 5 மணி. கொடியேற்றம், செபமாலை திருப்பலி.
18—24 மாலை 5 மணி. செபமாலை, திருப்பலி.
25-5 89 காலை 7 மணி. முதல் நன்மை திருப்பலி, மாலை 6 மணி. நற்கருணை வழிபாடு.
26-5-89 காலை 7 மணி. திருநாள் திருப்பலி.

A/92. பங்குத்தந்தை.

பண்டத்தரிப்பு காடாப்புலம் மருத்துவமனை
புனித வேளாங்கண்ணி

**சிற்றாலய திருவிழா**

18-ம் திகதி மாலை 5 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.
18, 19-ம் திகதி மாலை 5 மணிக்கு ஆராதனைகள்.
20-ம் திகதி காலை 6-45 மணிக்கு திருவிழாத் திருப்பலி.
அன்னையின் பக்தர்கள் அன்புடன் அழைக்கப்படுகிறார்கள்.

பங்குத்தந்தை.
A/99 மாதகல்.

கரம்பன்
அன்னை வேளாங்கண்ணி

**திருவிழா**

**22-5-1989 தொடக்கம்—31-5-1989 வரை.**

★ தினமும் மாலை 5 மணிக்கு செபமாலையுடன் வழிபாடுகள் ஆரம்பமாகும்.
★ திருநாள் திருப்பலி 31-ம் திகதி காலை 6.30 மணிக்கு யாழ் ஆயர் அவர்களின் கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்படும்.
★ அனைவரையும் திரண்டுவந்து அன்னையின் ஆசிர் பெற்றுச் செல்ல அழைத்து நிற்கிறோம்.

A/100 கரம்பன் பங்குத்தந்தை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீட்டுக்கொரு பாதுகாவலன் - உங்கள் பங்கில் நடைமுறைப் படுத்துங்கள்**

# காவியத் தலைவி

— நாவண்ணன்

(சென்றவாரத் தொடர்ச்சி)

ஒலிவமரத் தோட்டத்தில் இறைகுமாரன் தனக்கு நிகழவிருக்கும் வேதனைகளை எண்ணி "தந்தையே, உமக்கு விருப்பமானல் இத்துன்பக் கலத்தை என்னிடமிருந்து அகற்றியருளும்; எனினும் என்விருப்பமன்று உம்விருப்பமே நிறைவேறட்டும்'' (லூக். 23:42) என்று இறைசித்தத்துக்கு தன்னை அர்ப்பணித்த கிறிஸ்துத்தன்மையை மரியாளின் இந்த அர்ப்பணச் செய்கையில் காண்கின்றோம். நிலத்தின் தன்மையே செடியில் சுவறும் என்பதனை முனிவர் இங்கு கோடிகாட்டத் தவறவில்லை

இறைசித்தத்துக்காகத் தன்னை அர்ப்பணித்த பின்னரும் திருமணத்தின் மீது இருந்த வெறுப்பினை அவளால் தவிர்க்க முடியவில்லை. இந்த மனநிலைப்பாடானது திருமணம் முடித்து சூசையை முதன் முதல் தனிமையில் சந்திக்கும் வரையில் அவளிடமுள்ளது.

இறைவனும், அவளைச்சார்ந்தவர்கள் தோழியர் பலவிதத்திலும் ஆறுதல் மொழிந்தும் அவள்மனம் ஆறுவதும் அலைவதுமாகத் தவிக்கின்றாள். அலங்காரங்கள், ஆபரணங்களை வெறுக்கின்றாள், சுயம்வர மண்டபத்துள் நுழைகின்ற போது கூட வெறுமையான மனதுடனும், எதுவித சோடினைகளற்றவளாகவும் செல்கின்றாள். அணிகலன்கள் ஏதும் அணியாதவளாக அவள் செல்லும் காட்சியினைக் கண்ட ஆண்டவன் வானத்து அணிகலன்களாம் அறம் எனு மணிமாலைகளையும், ஞானமெனப்படும் ஒளிரும்விண்மீனும் வைரத்தோடுகளையும், அருளெனும் தேன்சிந்தும் மாலைகளையும், தவம் எனப்படும் ஆடைகளையும் வானவர் மூலம் அணிந்துவிட்டான் என்பது திருமணமாகப்போகும் எமது காவியத் தலைவி மரியாள் பற்றிய வீரமாமுனிவன் கூற்றும்.

சுயம்வரநாயகி:

தனக்கு உரிய மணாளனை, வாழ்க்கைத் துணைவனைத் தெரிவு செய்வதற்காக பல்வேறு தரப்பட்ட இளைஞர்கள் குழுமியிருக்கின்ற சுயம்வர மண்டபத்துள் மணப்பெண் நுழைகின்றாள்.

மரியாளை ஒருபுறம் திருத்திவிட்டு வேறு சாதாரண அரசிளங் குமரியைப்பற்றி கற்பனைபண்ணிப் பார்ப்போம்.

அவளுடம்பின் ஒவ்வோர் அசைவையும் "ஆஹா! ஓஹோ!!" என்று அந்த வாலிபக் கூட்டம் வாய் திறந்து புகழும், இரசிக்கும். விரும்பியோ விரும்பாமலோ மன்மத பாணத்தின் தாக்கத்தால் தவிப்பவர். அவள் கடைக்கண் பார்வை தானும் தம்மீது விழாதா என்று ஏங்குவர் அவர்கள் தம் விழிகள் அவளையே மொய்த்துக் கொண்டிருக்கும் மணமக்களின் உள்ளத்து உணர்வுகளையும், கற்பனைகளையும் எழுத்தில் வடிப்பதே இயலாத காரியம். இப்படியெல்லாம் உணர்வலைகள் மோதக் கூடியதே ஒரு சுயம்வர அரங்கம் என்பதை ஏனைய காவியங்களில் படம் பிடித்துக் காட்டப்படும் சுயம்வரக்காட்சிகளைப் படிக்கும்போது நாம் காணலாம்.

ஆனல் வீரமாமுனிவன் தனது கதைத் தலைவியை சுயம்வரமண்டபத்துள் அழைத்துச் செல்லும் போது படிப்பவர் மனதில் படியச் செய்யும் காட்சிகளே வேறு. அங்கு மணமக்களின் மனதில் ஏக்கங்கள் ஏற்படுவதற்குப் பதிலாக தாக்கங்கள் ஏற்படுவதாகவே கூறுகின்றான். வெறி ஏற்படுவதற்குப் பதிலாக விழிப்பு ஏற்படுவதாகவே விளக்குகின்றான்.

அருள் அணங்கு:

சிற்றின்ப உணர்வுகளும், ஆசையும், பொறாமையும், போட்டியும் எழக்கூடிய அந்தச் சுயம்வர மண்டபத்திலே பேரழகி மரியாவின் வருகையால் அங்கு நிகழ்ந்தவையோ வித்தியாசமானவை.

"விண்மீன்கள் மத்தியிலே தண்மதிபோல் இவள் வருதல் கண்டு மயக்க இருள், குற்றங்கள், பசாசுகள் யாவும் பதினேழு காத தூரம் பாய்ந்து ஓடின."

"பூவுலகில் ஒப்பில்லாக் கன்னிவரக்கண்டு மலர்களை விடுகின்ற மன்மதனும், காம இச்சைகளும், பொய்யும், பாவமும் நாம் தேனருந்தத் தகாத மலர் இது என்று கண்டு அகலும் வண்டுகள் போல் அகன்று போயின."

"அவள் கண்களை ஒருவன் நோக்கினல் அவனிடமுள்ள காம உணர்வுகள் அற்றுப் போகும். மூடிய அவளது கண்களை நோக்கினல் அச்சமும் கலக்கமும் தோன்றும். அவள் விழித்துப் பார்த்தால் அவள் பார்வையிலே தெய்வலோகத் தரிசனம் கிட்டும், அக்கண்களினூடே கதிரவனின் ஒளி பிரகாசிக்கும்"

"அம்பு விழியார் எனப்படும் ஏனைய பெண்களின் சொல்லானது கொல்லும் சொல் என்று கூறப்படும். ஆனல் இத்தெய்வக்கன்னிகையின் சொல்லானது உயிர் காக்கும் சொல்லாக வாழ்வளிக்குப் சொல்லாகவுள்ளது.

இவளது தெய்வீக அழகானது அந்த மண்டபத்துள் இருந்த அனைவரையும் சிறை செய்தது. ஆனல் அந்தச் சிறை இன்பத்தையல்லவா வழங்குகின்றது.

அந்தப் பேரழகைக் கண்டு இரசிக்க இரண்டு கண்கள் போதாவே ஆயிரம் கண்களையல்லவா எமக்குத் தந்திருக்க வேண்டும். அந்த இறைவன் என்று பார்த்தவரை பரிதவிக்க வைத்தது.

"இவள் பால் எமது உள்ளத்தைப் பறிகொடுத்து விட்டோமே! இவள் எம்மைக் கொள்ளை கொண்டு விட்டாளே. களவு கொடுத்தவர்கள் கவலைப்பட வேண்டுமே.

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

# புதுப் பொலிவு பெற்றுள்ள புனித வளனுர் தேவாலயம்

யாழ். திருச்சபைக்கும் தமிழ் கூறும் நல்லுலகிற்கும் பெருமை தேடித்தந்த பெருமகன நல்லூர்ச் சுவாமி ஞானப்பிரகாசரை உருவாக்கித் திருவாக்கிச் சிறப்புப் பெற்றது சீர்மிகு அச்சுநகர் புனித சூசையப்பர் ஆலயப் பங்கு ஆகும். இப்பங்கின் பாதுகாவலரான புனித சூசையப்பருக்கு பத்தொன்பதாம் நூற்றுண்டின் ஆரம்ப காலத்தில் மண்சுவரினல் கட்டப்பட்டு ஓலையினல் மேயப்பட்ட ஒரு சிறிய ஆலயம் ஸ்தாபிக்கப்பட்டது. காலப்போக்கில் திருச்சபை இப்பகுதியில் ஆழமாக வேரூன்றத் தொடங்கவே தற்போது அமைந்துள்ள இடத்தில் 1898ஆம் ஆண்டளவில் கற்சுவரினல் இவ்வாலயம் கட்டி முடிக்கப்பட்டு அபிஷேகம் செய்து வைக்கப்பட்டது

1950ஆம் தசாப்த ஆண்டுகளில் அருள்திரு லெக்கூட்டுர் அடிகளாரும் அவரைத் தொடர்ந்து அருள்திரு சிங்கராயர் அடிகளாரும் இப்பங்கின் பரிபாலகர்களாக இருந்த காலப் பகுதிகளில் இவ்வாலயத்தில் பாரிய திருத்தவேலைகள் இடம்பெற்றன.

கடந்த ஆண்டின் இறுதியிலும் இவ்வாலயத்தில் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டுப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது இவ்வாலயப் பங்குக்குரவ அருள்திரு பேர்னுட் றெக்கோ அடிகளாரின் தலைமையிலும் பங்குமக்களின் தாராள ஒத்துழைப்பினலும் அழகுறமெருகூட்டப்பட்டுப் புதுப் பொலிவுடன் காட்சி தருகின்றது இவ்வாலயம்.

அச்சுநகர் சூசை தாசன்

# செட்டிகுளப் பங்கில்....

செட்டிகுளப் பங்கைச் சார்ந்த கப்பாச்சி, முசற்குத்தி கங்கங்குளம், கந்தசாமி நகர், கல்லாறு, அருவித் தோட்டம் பெரியகுளம் ஆகிய கிராமங்களில் வாழ்ந்த குடும்பங்களுக்கு பங்குத்தந்தை அருட்திரு லடிஸ்லாஸ் அவர்கள் அருட் சகோதரிகள் மறையாசிரியர்கள் கத்தோலிக்க ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் மூன்று நாட்கள் மறைக்கல்வி வகுப்புக்களை நடத்தி அவர்களுக்குத் தகுந்த அறிவை ஊட்டிய பின் ஞானஸ்நானம் தொண்ணூற்றி மூன்று (93) சிறுவர்களுக்கும் முதல்நன்மை ஐம்பத்தொன்பது சிறுவர்களுக்கும் திருமணம் என்னும் திருவருட்சாதனம் பதினறு (16) குடும்பங்களுக்கும் வழங்கப்பட்டது.

சேவைகள் பலவகையாக இருந்தபோதிலும் ஆன்மீக அத்திவாரத்தினை இவர்களுக்கு அள்ளி வழங்கி புத்துணர்வை ஊட்டி அரிய சேவையினை ஆற்றிய பெருமையும் புகழும் பங்குத்தந்தை அவர்களையே இன்று சார்ந்து நிற்கின்றது. பங்குத் தந்தையவர்களின் அயராத உழைப்பே, திருச்சபையில் பல குடும்பங்களை சிதறுண்ட பல உள்ளங்களை ஒன்றிணைக்க உதவியது என்று கூறினல் அதில் வியப்பேதும் இல்லை. செட்டிகுளம் வாழ் கிறிஸ்தவ மக்கள் தமது தளராத மனநிலையுடன் ஏனைய உதவிகளை உவந்தளித்து விசேஷ விதமாக உணவு வழங்கி இச்சேவையினை திறம்பட செய்வதற்கு உதவினர்.

இவ்வாறு பல வருடங்களாக இருளில் வாழ்ந்து ஆன்மீகத்தில் அக்கறையின்றி இருந்தவர்கள் இந்த முத்தான மூன்று நாட்களில் புதுவாழ்வு பெற்றுப் புதுப்பொலிவுடன் திகழ்கின்றார்கள். இன்று ஆண்டவன் சந்நிதானத்தின் முன் மலர்ந்த அழகிய மலர்களே இந்த உள்ளங்கள். எனவே கிறிஸ்தவ பணியிலே நாம் ஒவ்வொருவரும் ஆயனில்லா மந்தைகளை அண்டிச் சென்று அவரண்டை சேர்ப்பதில் அனைத்தையும் அள்ளி வழங்குவோம் அமைதியின் பாதையிலே ஆன்மீகப் பணிதனை ஆற்றிடுவோம்

தகவல்:- மேரி அகஸ்ரீன்

## குறுக்கெழுத்துப் போட்டி 10இன் முடிவுகள்

பாராட்டுப் பெறுவோர்

### மன்னர் மறைவட்டம்

1.) பி. சுதா துரம் 2.) தே. யெகதீஸ்வரன் குலாஸ் 3.) செ. ஜன்சிராணி டலிமா 4.) எ. எமற் குருஸ் 5.) வேர்ஜினியா நாதன் 6.) பொன்னுக்கோன் ஜெனவி 7.) அ. சில்லோஸ்ரா டீ சில்வா (8. லோ. ஏரோணியாசாந்தி லெம்பேட் 9) ஏ. ராஜன் பீரிஸ் 10.) எஸ். லலித்தா 11.) ஜே ரூேயேட் ரூணி பி. கமிலஸ் தீலிபன் 12.) லெ. நீகன். சோசை 13) ஜே. தீபன் சொய்ஸ்சா 14.) ஜே கீதாஞ்சலி. சோசை 15.) ஏ. நியூட்டன். கூஞ்ஞ 16.) நீக்கிலான் பிரான்சிஸ்கம்மா 17.) ஜே. புவிராஜசிங்கம் 18.) ஜெனிபர். குலாஸ் 19.) ஜே. அகிலன் சொய்ஸ்சா 20) ஜே. கீதாஞ்சலி. சோசை 21.) ஜே. மெடோனு சொய்சா 22) ஜே. தீபன் சொய்சா 23.) ச. பிரபாகரன் (24. ஜே. ஜெயப் பிரியா 25.) ச. பியூலா 26.) எஸ் ஜீட் பெஸ்கி 27) ஏ. யெனிற்ரூ 28.) ஜே. ஜெயப் பிரகாஷ் 29.) ஏ. எம். ஜே. இம்மானுவேல் சோசை 30.) கு. மெல்வின் ரெறன்ஸ் குருஸ் 31.) ப. யூடி சோபியா சோஞ்ச 32) பொ. பிரங்லின் கலிஸ்டஸ் 33.) றுக்சான் பிறிம்மோ. ஒஸ்வோல்ட் 34.) க. அன்றூ ஜெனே சோசை 35) ச. பிலேந்திரன் ஜோண்சி 36.) பி. யேசுதாசன் 37.) அ. றெமிஜியஸ் சிராய்வா 38.) அ. ஒனோறியஸ் சிராய்வா 39) வியோணிலா 40) அ. லூக் குருஸ் 41.) செ மேரிஅன்ரனிற்ரூ (ஜெயா) 42.) கே. செல்வநாதன் சோசை 43) பி. ஞானப்பிரகாசம் - சோசை 44.) யசிந்தா பரந்தாமன் 45.) எஸ். நியுமன்குருஸ் 46) அ. அன்புராஜ் லெம்பேட் 47) அ. இன்பராஜ் லெம்பேட் 48.) பி. விகினி சோசை 49.) ப. அனற்ரூ சுஜானு 50.) ச. விஜேதினி சவுந்தரநாயகம்.

### கிளிநொச்சி மறைவட்டாரம்

1.) எஸ். றகி 2.) நீ. ஜீவலூசியா 3.) சா. அருள்தாஸ் 4.) செலஸ்ரீன் பரிமளா 5.) ப. ஷரோமி 6) அ. தர்ஷினி 7.) கி. அருள்மதி 8) ஜே. டெனிசியஸ்லாஸ் 9.) வி. வின்சன் 10.) அ கெலன்ராணி 11.) ஆ. மரியமலர் 12) ஆ அன்ரனி அலெக்சாண்டர் 13) அ யோன் கெனடி 14.) றீஹன் திருச்செல்வம் 15) ஜெயம் யோசப் சேவியர் 16.) வ தேவராஜ் 17.) அ. நிர்மலா 18) சா. மாலதி 19.) த. ஞான தமிழ்ச்செல்வி.

### யாழ்ப்பாண மறைவட்டம்

1.) சுவேந்தினி பீற்றர் 2) கிறிஸ்ரியன் பெர்னுன்டோ 3.) ஜெயவதி 4.) நொயிலின் 5.) மேரிறதினி 6.) சுகந்தி ஜெனிற்ரு 7.) சுதா டேவிற் 8.) டொறிஸ் ராஜினி ராஜகுலம் 9.) செசில் பாரதி இராஜேந்திரம் 10.) கிறிஸ்ரி ராஜபாலன் அஞ்சலோ 11.) சியாமா அகஸ்ரின் 12.) இருதயதாசன் 13.) ரி. ஆர். செல்வரட்ணம் 14.) அ. சாந்தினி 15.) ம. மேரி றஞ்சினி 16) ம ஜெயரத்தினம் 17.) அ. மோசேஸ் 18.) சி. அந்தோனிமுத்து 19.) அ. பிலிப்ஸ் விஜயரத்தினம் 20.) யே. யூட் யேசுநேசன் 21.) அ. லூர்து மேரி 22.) எஸ். பேபிராணி 23) சூசை சகாயரூஜா 24.) அ. அந்திரேசுப்பிள்ளை 25.) இ. துளசி யூக்கறீஸ்ரா 26.) இ. ஜீன் புளோறிஞ 27.) யே. அன்ரன் யோசவ் 28.) ச. மெசியா 29.) இ. எறிக் யோசவ் 30.) போமஸ்யூடித கோமணி 31.) சி. சிவகாந்தன் 32.) டெ. ப. சேவியர் (33. லூசியாகிறேஸ் 34.) மியூறின் றூபி 35.) அ. வில்டா மேரி சிரால்லா 36.) அ. கில்டா சிராய்லா 37.) பே. மேரி அன்ரனிற்ரூ 38.) பி. மிரியம் யாழினி 39.) அசம்ரா ஸ்ரனிஸ்லோஸ் 40.) குருமாணவன் சந்தியோகு 41.) டனேஸ்ஜொஜிஸ்

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

## உழைப்பு

உழைப்பின் உயர்வுக்கு
பெருவிழா
உலகின் பாட்டாளியின்
தனிவிழா
மதஇனம் பாரா.
மகிழ்விழா
தொழிலாளர் சிறப்புறும்
மேவிழா
பாட்டாளி குரல்கள்
ஒலிக்கின்றன.
பரமனின் பணிகளும்
இணைகின்றன
உழைப்பவன் எல்லாம்
உயர்ந்துவிட்டால்
உண்மையில் இறைவனும்
மகிழ்ந்திடுவான்.

— யோகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கங்கை புனிதமாகின்றது

வழமைபோன்று காலைச் சாப்பாட்டைத் தயாரிப்பதில் பம்பரம்போன்று சுழன்றவாறு குசினிக்குள் வேலையில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தாள் புனிதம். காலைச்சாப்பாட்டை விரைவாகக் கொடுத்து மகனை பாடசாலைக்கு அனுப்பி விடவேண்டும் என்ற நோக்கில் அவசர அவசரமாகவேலைகளைச் செய்துகொண்டிருந்தாள். சற்றுத் தாமதமானால் மகனை பாடசாலைக்கு ஏற்றிச்செல்லும் மினிபஸ் போய்விடும். இதனால் தானே மகனைப் பாடசாலைக்கு அழைத்துச் செல்லவேண்டிய நிலையைத் தவிர்ப்பதற்காகவே காலையில் வேலைகளை விரைவாக முடிப்பது அவளுடையவழக்கம்

அன்றும் வேலைகளை முடித்து விட்டு முற்றத்திற்கு வந்த போது தபால்காரனின் மணிச் சத்தம் கேட்டு வாசலுக்கு ஓடி வந்தாள் புனிதம். அவளைப் பொறுத்தமட்டில் மணிச்சத்தம் எப்பொழுதும் மகிழ்ச்சியைக் கொடுக்கும், சந்தோஷத்தின் அடையாளமாகவே தென்பட்டது. ஏனெனில் வெளிநாட்டில் இருக்கும் தன் கணவன் ராஜாவிடமிருந்து கடிதத்தை எதிர்பார்த்து, வாங்கிப் பெற்றுக்கொள்வதில் அவளுக்கு ஒரு தனி அலாதியான இன்பம். இன்னும் சொல்லப்போனால் தபால்காரன் அவளுடைய கணவனின் தூதுவனாகவே தென்பட்டான். ஒவ்வொரு நாளும் கணவனின் கடிதத்தை எதிர்பார்த்துக் கிடைக்காமற் போனால் அவள் அனுபவிக்கும் வேதனையும் மனச்சோர்வும் அவளுக்கு மட்டும்தான் தெரியும். கடிதத்தை வாசிக்கும்போது கணவனே நேரில் பேசுவதுபோன்ற பிரமையில் மனமகிழ்ந்து தன்னை மறந்தே போவாள்.

ராஜா வெளிநாட்டிற்குச் சென்று கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகள் கடந்துவிட்டன. புனிதம் தன் கணவனைப் பிரிந்து மூன்று ஆண்டுகள் தன் ஒரே மகனோடு ஒருவாறு காலம் தள்ளிவிட்டாள். கடைசியாக அவள் போட்ட கடிதத்தில் விரைவில் ராஜாவை ஊருக்கு வரும்படி ஆசையாகக் கேட்டிருந்தாள். அன்று வந்த கடிதத்தில் ஊருக்கு இன்னும் இரண்டு மாதங்களில் திரும்புவதாக ராஜாஎழுதியிருந்தது அவளுக்கு உள்ளூர ஆனந்தத்தை அளித்தது அன்றே கோயிலுக்குச் சென்று தேவதாயிடம் நன்றி சொல்ல வேண்டும் என்ற தீர்மானத்துடன் எழுந்தாள். ஏனெனில் தன் கணவன் விரைவில் வெளிநாட்டிலிருந்து திரும்பித் தன்னோடு வாழத் துணை செய்யவேண்டும் என்று தேவதாயிடம் மன்றாடியிருந்தாள். கணவனை எந்தவித தீங்கும் நேரிடாமல் பாதுகாக்கும் பொறுப்பை தேவதாயிடமே ஒப்படைத்திருந்த புனிதத்திற்கு தன் மன்றாட்டு கேட்கப்பட்ட மகிழ்ச்சியில் மனதிற்குள் நன்றி சொல்லிக் கொண்டாள் அன்று மாலை கோயிலில் தேவதாயின் சுரூபத்திற்கு முன் முழந்தாட்படியிட்டு மன்றாடியபோது அவளை யறியாமலே கண்களில் நீர் பனித்தது. கடந்த கால சுகப்பான நினைவுகள் அவள் மனத்திரையில் நிழல்களாகி நிஜங்களாகத் தெரியத்தொடங்கின.

ராஜாவும் புனிதமும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள்; சிறு வயதிலிருந்தே ஒரே பாடசாலையில் படித்தவர்கள். உயர்தர வகுப்பு படிக்கின்றபோது அவர்களிடையே காதல் அரும்பத் தொடங்கியது. காதல் ஒரு புனிதமான உணர்வு அதைக் களங்கப்படுத்தாமல் வரம்பு

**சிறுகதை**

மீறாமல் காக்கின்றபோது அது உண்மையான அன்பிற்கும் வாழ்வின் பிணைப்பிற்கும் இட்டுச் செல்லும் என்பது புனிதத்தினுடைய கருத்து. அவள் தன் பெயருக்கேற்ற விதத்தில் காதல் உணர்வைப் புனிதமாகவே வளர்த்து வந்தாள். ராஜனும் அவளை உயிருக்குயிராக நேசித்து வந்ததை அவள் அறிவாள், ஒரு நாள் திடீர் இராணுவ சுற்றிவளைப்பில் ராஜன் கைது செய்யப்பட்டு சில மாதங்களின் பின் விடுவிக்கப் பட்டான். அவன் விடுதலைக்காக புனிதம் வேண்டாத கோயில்களே இல்லை. இச்சம்பவத்தின் பின்பு ராஜனின் பெற்றோர்கள் பாதுகாப்பின் நிமித்தம் ராஜனை வெளிநாட்டிற்கு அனுப்பிவிடத் தீர்மானித்ததை யறிந்த புனிதம் இதயம் குமுறினாள் ராஜனின் பிரிவைத் தாங்க முடியாமல் கண்ணீர் உகுத்தபோது அவன் சொன்ன வார்த்தைகள் இன்னும் நெஞ்சில் பசுமையாக

✻✻✻✻✻✻✻✻✻✻✻

**றேகான்ஸ்ரனி அன்ரனி**
உயலூர்

✻✻✻✻✻✻✻✻✻✻✻

இருந்தது "புனிதம், என் பாதுகாப்பிற்காக மட்டும் வெளியில போகல்ல. உன்னோடு நீண்ட நாள் வாழணும் என்ற ஆசையிலதான் போறன் நிச்சயம் திரும்பிவந்து உன்னைக் கண்கலங்காம காப்பாத்துவன். இது நான் உலமீது வைத்திருக்கின்ற பாசத்தின் மீது ஆணை".

ராஜன் வெளிநாடு சென்ற ஒரு வருடத்திற்குள் அவள் வாழ்க்கையில் நடக்கக்கூடாத தொன்று நடந்துவிட்டது. திடீர் இராணுவ நடவடிக்கையின போது புனிதம் தன் புனிதத்தை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது. அவள் கற்பு பலவந்தமாகச் சூறையாடப்பட்டது. எதை ஒரு பெண் இழக்கக்கூடாதோ அதை இழந்துவிட்டாள். மானத்தைத் தன் உயிரென மதித்த அவள்வாழ்வு இருண்டு விட்ட நிலையில் பைத்தியம் பிடித்தவளாகவே [illegible] டாள். தலைவிரி கோலத்துடனும் மிரண்ட விழிகளுடனும் வீட்டிற்குள்ளேயே முடங்கிக் கிடந்த அவள் பல தடவைகளில் தற்கொலை முயற்சியில் ஈடுபடவும் செய்தாள். இதை ராஜா அறிந்தால் என்னை ஏற்றுக்கொண்டு வாழ்வாரா? அல்லது என்னை வெறுத்து ஒதுக்கிவிட்டு வேறு யாரையாவது திருமணம் செய்வாரோ என்ற பலவிதமான சிந்தனைகளோடு அவள் போராடியபோது விரக்தியே வெளிப்பட்டது. மானம் அழிந்தபின் வாழ்வதா? புனிதத்திற்கு எல்லாமே சூனியமாகிவிட்டது. இந்த செய்தி எப்படியோ ஊர்முழுவதும் பரவி ராஜாவிற்கு எட்டிவிட்டது. ராஜாவும் அடுத்தமாதம் ஊருக்குத் திரும்புவதாக அவனது பெற்றோருக்கு எழுதியிருந்த செய்தி புனிதத்திற்கு எட்டியபோது நெஞ்சம் குமுறினாள். எந்த முகத்தோடு ராஜாவைச் சந்திக்கப்போறன் சந்தர்ப்பவசத்தால் மானத்தை இழந்துவிட்ட பெண்ணிற்கு வாழ அருகதையில்லையா? என்ற கேள்விக்கணைகள் அவள் இதயத்தைப் பிழிந்துவிடுவது போலிருந்தது. ராஜா ஊருக்குத் திரும்பியவுடன் நல்ல சீதனத்துடன் திருமணம் செய்துவைக்க அவனுடைய தாய் விரும்பினாள் ராஜாவும் ஊருக்கு வந்த உடனேயே புனிதத்தைசந்திக்கக் கிளம்பிய போது தாய் வழியில் இடை மறித்தாள "ராஜா நீ எங்க போறாய் என்று எனக்குத் தெரியும் ஆனா, அதுக்கு முதல் என்ர சில கேள்விகளுக்கு பதில் சொல்லிட்டுப் போ" என்ற போது ராஜா "என்னம்மா நான் புனிதத்தட வீட்ட தானே போறன். அவளைப் பார்க்காம என்னால இருக்க முடியாதம்மா" அப்போது தாய் "மானங் கெட்டவளையா சந்திக்கப் போறாய். இனி அவளுடைய உறவே உனக்குக் கூடாது" என்றபோது ராஜா "அம்மா அந்த வார்த்தையை மட்டும் சொல்லாதேயுங்க ஊர் உலகத்திற்கு அவள் மானங்கெட்டவளாக இருக்கலாம். அவள் சந்தர்ப்பவசத்தால் கெடுக்கப்பட்டது. அவள் செய்த குற்றமா? நான் அவளட உள்ளத்தைத்தான் நேசிச்சன், உடலைமட்டும் நேசிக்கிறவங்களுக்கு அவள் சோரம் போனவளாக இருக்கலாம். என்னைப் பொறுத்த வரைக்கும்என்னுடையபுனிதம் என்றும்புனிதமானவள்தான்" என இரைந்து ஆவேசம்மேலிட்டவனாக ராஜா கத்தியபோது தாய் அதிர்ந்து போனாள். "ராஜா நீ அவளைத்தான் திருமணம் செய்யப்போறனெண்டு ஒற்றைக்காலில் நின்றால், நான் உனக்கு இனி அம்மா இல்லை [illegible] நான் ஆசைப்படறன்" என்று கண்ணீர் மல்க கூறியதைக் கேட்டு ஒரு கணம் ராஜா அசந்து போனான். "அம்மா பலாத்காரத்தினால் ஒரு பெண் கெடுக்கப்பட்டால் அவள் மானம் பறிபோய்விடுமா? அதற்காக அவள் சாகவேண்டுமா? என் புனிதத்தினுடைய உடல் மாசடைந்திருக்கலாம். ஆனால் மாசறியாத அவள் உள்ளத்தைத்தான் உயிருக்குயிராக நேசிச்சன் இந்த சமுதாயத்தின் பாரம்பரியங்களுக்கும் கருத்துக்களுக்கும் என் புனிதத்தை பலியாக்கமாட்டன். என் புனிதம் என்றும் என்னுடன் வாழத்தான் போகிறாள். மாசுபடுத்தப்படுத்த என் கங்கை புனிதம் என்றால் நிச்சயம் புனிதமடையப் போகிறாள்" என்ற வார்த்தைகளை கேட்டுத் தாய் திரும்பிப்பார்த்தபோது ராஜா புனிதத்தினுடைய வீட்டை நோக்கி நடந்து கொண்டிருந்தான்.

(யாவும் கற்பனையல்ல)

தேனருவி:-

## திரித்துவப் பெருவிழா (14-05-89)

## இறைவனே ஒரு 'குடும்பம்'

குடும்ப ஒன்றிப்பிற்கும், அன்புறவுக்கும் பல எடுத்துக் காட்டுகள் சுட்டிக்காட்டப்படுகின்றன இலக்கியங்களும், வரலாறும் பல காதல் வீரர்களை முன்வைத்து குடும்ப உறவில் பிரமாணிக்கம், தியாகம், வீரம். ஒற்றுமை விளங்க வேண்டுமென்று செய்தி கூறுகின்றன. அம்பிகாவதி- அமராவதி, சலீம்- அனார்க்கலி, கோவலன்- கண்ணகி, நளன்- தமயந்தி, இராமன்- சீதை, சாஜகான்- மும்தாஜ், றோமியோ- ஜூலியற், லைலா- மஜ்னு, என்று போற்றுதற்குரிய பல அன்புள்ளங்களை சமூகம் தருகிறது. நசரேத்தூரில் வாழ்ந்து இறைமகனைப் பெற்று, உருவாக்கி, வளர்த்து உலகிற்கு அளித்த மரியாள்- சூசை தம்பதிகளை திருச்சபை என்றுமே மறக்காது.

அனைத்து உறவுகளுக்கும், சிகரமும் ஊற்றும், முடிவுமாக விளங்கும் இறைவனே ஒரு 'குடும்பம்' என்றால் என்ன நினைக்கிறீர்கள்? இது மனித உறவுகளுக்கு பெரும் ஊக்கத்தையும், உற்சாகத்தையும் தருகிறது. தந்தை, மகன், தூய ஆவி என்று பெயரிட்டு அழைத்து உலகம் போற்றி ஆராதிக்கும் மூவொரு கடவுள் பன்மையில் ஒருமையாய் ஒரே கடவுளாய் விளங்குகிறார். பாரம்பரியமும், வழிபாடும், மட்டுமல்ல வேதாகமம் மூவரின் நிலைகளைத் தெளிவுபடுத்துகின்றன. மூவொரு கடவுள் எனும் மறை உண்மையைப் புரிய முற்பட்டார்புனித அகுஸ்தினார். கடற்கரையில் தோண்டிய சிறிய குழிக்குள் சமுத்திரத்தையே சின்னச் சிப்பியினால் அள்ளிப்போட முடியுமா? பரம்பொருளை மனிதனின் சின்னப் புத்தியினால் புரிந்து கொள்ளவே முடியாது எனத் தெளிந்து கொண்டார்.

ஆனாலும் "தந்தையுடையதெல்லாம் என்னுடையதே ஆவியானவர் எனக்குள்ளதிலிருந்து பெற்றுக்கொண்டு உங்களுக்கு அறிவிப்பார்" என்று இயேசு கூறும்போது அவர்கள் உறவிலும், செயற்பாட்டிலும் மன ஒற்றுமையின் நிறைவைக் காண்கிறோம். தந்தை நீரூற்று என்றால் மகன் அதிலிருந்து பாய்ந்து ஓடும் ஆறு ஆகும். தூய ஆவி அது சங்கமமாகும் கடல் ஆகும். தந்தை சூரியன் என்றால் மகன் அதன் கதிர் தூயஆவி வெப்பம் ஆகும். அதாவது ஒருவரிடமிருந்து ஒருவரைப் பிரிக்க முடியாது. பெயர்கள் தான் வேறு.

தந்தை மகனுக்கு சான்று பகர்ந்துமகனை மகிமைப்படுத்துகிறார். மகன் தந்தையின் விருப்பத்தை அறிந்து நிறைவுசெய்து தந்தையுடன் அன்பிலும் செபத்திலும், பணியிலும், ஒன்றிக்கின்றார். தூயஆவி மகனது போதனைகளைத் தெளிவுபடுத்தி மகனது சீடர்களை வழிநடத்துகிறார்.

அப்பா என்று அழைத்து செபிக்க மக்களைத் தூண்டுகிறார். இத்தந்தை, மகன், தூய ஆவி உறவு வானங்களுக்கு மேலாக நடைபெற்ற ஒரு கற்பனை அல்ல. மதிப்பு, அர்ப்பணம், சாட்சியம் போன்ற பண்புகள் இயேசு என்ற இறை- மனிதனின் வாழ்வில் மிளிர்ந்ததைப் பார்க்கின்றோம்.

மனித உறவுகளில் திரித்துவத்தின் ஒன்றிப்பை வாழும் வடிவங்கள் எவை?

★ ஒருவர் ஒருவருடைய தனித்தன்மையையும், வித்தியாசங்களையும் அறிந்து புரிந்து கொள்ளுதல் (விட்டுக்கொடுத்தல்)

★ ஒருவர் அடுத்தவாது உணர்வுகளையும் விருப்பங்களையும், சொல்லாமலும் புரிந்து அவற்றுக்கேற்ப செயற்படுதல் (ஒத்துணர்வு)

★ ஒருவர் தன் விருப்புகளை அடுத்தவர் மீது திணிப்பதை விடுத்து அவர்களை அவர்களாகவே வாழ, வளர துணைசெய்தல் (பரந்த மனம்)

★ அன்பை விலைகொடுத்து வாங்க முடியாது. எனவே கொடுக்கும் மனநிலையினால் அன்பை சுவைத்தல் (தியாகம்)

☆ தவறுகள் உராய்வுகள், சந்தேகம், வடு போன்றவற்றை உரையாடல் மூலம் தெளிவுபடுத்தி, இணைப்படுத்தி அரவணைத்தல் (மன்னிப்பு)

இவைபோன்றசிறிய ஆனால் உயர்ந்த பண்புகள் திரித்துவத்தை அன்றாட வாழ்வில் அனுபவித்து மகிமைப்படுத்தும் அரிய சந்தர்ப்பங்களாகும். பிதாவுக்கும், சுதனுக்கும் பரிசுத்த ஆவிக்கும் நாம் அளிக்கும் மகிமையை வெறும் வார்த்தையில் அல்ல மாறாகவும் உறவு நடவடிக்கைகளில் விளங்க முயற்சிப்பாம். திரித்துவப் பிரசன்னம் எம் சமூகத்திலும் குடும்பத்திலும், சுடர் விட்டு எரிய எம் உறவுகளைப் புதுப்பிப்போம்.

சுவாமி ஜீவா போல் அ. ம. தி.

பழமொழி. 8 : 22 - 31 என் மகிழ்ச்சி மனித மக்களுடன் இருத்தல்.

உரோ. 5 : 1 - 5 கடவுளின் அன்பு நம் உள்ளங்களிலே

அரு 16 : 12 - 15 தந்தையுடையதெல்லாம் என்னுடையதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீலக்கடலில் ஏமாறும் அலைகள்

மனித வாழ்வானது நம்பிக்கையின் அடிப்படையில் கட்டப்படுகின்றது. வாழ்க்கையில் எதிர்பார்ப்புக்களும், ஏமாற்றங்களும் இணைபிரியா நண்பர்களாக எம்மைத் தொடர்கின்றன. அதிலும் இந்த இளமைப் பருவமானது கனவுகளால் நிறைந்தது. சிந்தனைப் பறவை எமது மனக் கூண்டிலிருந்து வெளிக்கிளம்பி எதையெதையெல்லாமோ நினைக்கும். அடையமுடியாதவற்றையெல்லாம் நினைத்து ஏங்கும். ஆனாலும் இளமையின் எதிர்பார்ப்புக்கள், கனவுகள் நனவாகும் காலம் வரும்வரையில் நாம் காத்திருக்கவேண்டும்.

நாம் எப்போதும் உயர்வான சிந்தனையில் வாழவேண்டும். எமது எதிர்காலத்தை இப்படி, இப்படியாக அமைக்கவேண்டுமெனச் சிந்திக்கிறோம். இது சரியானதே இவ்வாறான உயரிய எண்ணங்களை தற்பெருமை என்றோ அல்லது கனவு என்றோ எண்ணலாகாது. உலகிலே உன்னத நிலையினை அடைந்த உயர்ந்த தலைவர்களை நாம் நோக்க வேண்டும். அவர்களின் வாழ்க்கை வரலாற்றை அறிய வேண்டும. "நீ யாரைப்போல் இருக்க விரும்புகின்றாயோ அவராகவே இருப்பாய்."

மனித மனம் ஒரு குரங்கு இது இல்லாதவற்றையே நினைந்து ஏங்கும் மனிதனால் கொடிய சிங்கத்தை கூண்டுக்குள் அடைக்க முடியும். யானையையும் அடக்கியுள்ளான். ஆனால் மனித மனத்தை மட்டும் அவனால் அடக்க முடியாதுள்ளது. அது தான்தோன்றித்திரியுமாராக இத ஒருநிமிடத்தில இந்த உலகையே பனத்தினை சுற்றி வந்துவிடலாம் அவ்வளவு வேகம் மிக்கது.

"நினைப்பதெல்லாம் நடந்து விட்டால் தெய்வம் ஏதுமில்லை" எனப்பாடுகின்றான் கவிஞன் உண்மை தான். நினைப்பவை எல்லாமே நடப்பதில்லை. இப்போது நடப்பவையெல்லாம் முன்பு நினைத்தவையும் அல்ல, எனவே எமது எதிர்பார்ப்புக்கள் நியாயமானவையாக இருக்க வேண்டும். எதிர்பார்ப்புக்கள் ஏமாற்றங்களாக மாறும்போது நாம் கவலையடைகிறோம் இது எல்லோருக்கும், எல்லா நிலைகளிலும் ஏற்படும் பொதுவான நியதி. எமது எதிர்பார்ப்பு வெறும் மனத் எவுடன் கூடிய கற்பனை மட்டுமா? அல்லது செயலுடன் கூடிய முயற்சியுமா? என்பது முக்கிய கேள்வி எம் எதிர்பார்ப்புக்களை அடையவேண்டுமானால் அதற்கான முயற்சி முக்கியமானது "முயற்சி திருவினையாக்கும்" முயற்சியுடன் செயற்பட்டவன் ஒருபோதும் ஏமாற்றம் அடையமாட்டான். வெற்றி மகள் நிட்சயம் அவன் கழுத்தில் வாகை சூடுவாள்

'டெமாஸ்கனிரஸ்' ஒரு கிரேக்க இளைஞன், பேச்சுக் கலையில் வல்லவனாக வரவேண்டுமென்று ஆசை. ஆனால் இவனோ திக்குவாயன் வசனங்களை ஒழுங்காக உச்சரிக்க மாட்டான். இவன் கூட்டங்களில் பேசினால் இவன் பேச்சைக் கேட்கச் சகிக்காமல் கூட்டம் கலைந்துவிடும் ஆனால் டெமாஸ்கனிரஸ் மனம் தளரவில்லை காட்டின் மத்தியில் கூழாங்கற்களை வாயில் வைத்துத் திக்கித் திக்கிப் பேசிப் பழகினான். விளைவு என்ன? ஒருகட்டத்தில், "கூட்டத்தை கலைக்க வேண்டுமா? கூப்பிடுங்கள் டெமாஸ்கனிரசை" என்று கூறியவர்கள் இப்போது "கூட்டத்தைக் கூட்ட வேண்டுமா? கூப்பிடுங்கள் டெமாஸ்கனிரசை" என்றார்கள்.

ஆம்! இவ் இளைஞனின் எதிர்பார்ப்பு குரலில் ஏமாற்றமாகத்தான் இருந்தது. அவன் முயற்சி செய்தான். அது வீண் போகவில்லை கிரேக்க தேசத்தின் தலைசிறந்த பேச்சாளரானான்.

நாளைய உலகின் நம்பிக்கைகளே! சற்றுச் சிந்தியுங்கள் உங்கள் எண்ணம் எப்போதாவது உருப்பெறுவது திண்ணம், அதற்காக செயற்படுங்கள், கற்பனை உலகைவிட்டு எழுந்து வந்து வாழ்ந்து காட்டுங்கள். தோல்விகளைக் கண்டு தயங்காதீர்கள். ஒவ்வொரு காலடியையும் நம்பிக்கையோடு எடுத்துவையுங்கள் முன்னே எமது இலட்சியம் எமக்கு தெளிவாகத் தெரிகிறது. அதை அடையும் மட்டும் ஓயமாட்டேன் என்ற 'பிடிவாதம்' வேண்டும். சிலர் சிரிப்பார்கள். பலர் பகைப்பார்கள். கவலை வேண்டாம், வாழ்வது நீங்கள் தான் எட்டி நின்று விமர்சனம் செய்வோர் செய்துகொண்டே இருக்கட்டும் நீங்கள் உங்கள் வழியில் துணிவோடு செல்லுங்கள்.

பரந்து விரிந்த நீலக்கடல், அங்கே பேரலைகள் எழுந்து தாண்டவமாடி கரையை வந்து சேர்கின்றன. அவை மீண்டும், மீண்டும் கரையில் வந்து எதையும் பெறாமலே திரும்பிச் செல்கின்றன. ஆயினும் அவ்வலைகள் ஓய்கின்றனவா?

சமூகமே!

நாளைய சரித்திரத்தின் நாயகர்கள் நாங்கள்—எம்மேல் நம்பிக்கை நாற்றுக்களை வீசுங்கள் நீங்கள்.

தமிழ்நேசன்
குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை

---

அமைதி குருமடம்
கொழும்புத்துறை
12-5 198 .




'அன்பு இளம் உள்ளங்களுக்கு'

சாந்தம் உடையோர்
பேறுபெற் றோரெனத்
தத்துவமும் சொன்னார்
— இந்தத்
தாரணி முழுவதும்
அவர்களுக் குரியது
தலைவர்கள் அவரென்றார்!

ஏந்தும் கோபம்
பழிவாங்கும் குணம்
எத்தனை எத்தனையோ—இங்கே
இடறி விழுந்தால்
கொடுமை நடத்தும்
வித்தகர் எத்தனையோ!

மாந்தரின் வாழ்வில்
தேவைப் படுவது
சாந்தம் தானென்றார் – அது
மண் ணும் ஆளும் விண்ணையும் ஆளும்
மகத்துவம் பாரென்றார்

— இயேசு காவியம்

உள்ளத்தில் சாந்தம் உடையோரைப் பேறு பெற்றோர் என இறைமகன் கிறிஸ்து போற்றுகின்றார். அவர்கள் நன்மை செய்வதில் வல்லவர்களாக விளங்குகின்றார்கள். அவர்கள் இறை இராட்சிய மதிப்பீடுகளை முதன்மைப்படுத்தி இறைவனுக்கு ஏற்புடையவர்களாக வாழ்கின்றார்கள். அமைதியான போக்கு, ஆழமான சிந்தனை, அன்புநிறைந்த செயற்பாடு போன்றவை அவர்களது இயல்பான தன்மைகளாகக் காணப்படும். அகங்காரம் ஆணவம் ஆத்திரம், பிடிவாதம், பழிவாங்குதல், பிறரில் குறைகாணும் மனப்பாங்கு போன்றவை அவர்களில் அருகிக் காணப்படும்.

சாந்தம் உடையோராய் சலிப்பின்றி வாழ சகலவல்லப தேவன் துணைபுரிவாராக.

அன்பு நெஞ்சன் வி. பி.

---

## குருசுமுத்தண்ணையின் கிசு கிசு-39

அடைக்கலம்: இந்த சின்னன்கள் என்ன பேச்சு பேசுதுகள் பாத்தியேண்ணை.

குரு: ஏன்தம்பி இதை ஆரப்பாத்து பழகினதுகள் தெரியுமே?

அடைக்கலம்: பெரியாக்கள் கதைக்கிறதை கேட்கிறதால வாற வில்லண்டம் பார் அண்ணை.

குருசு: ஏன்தம்பி அந்த பெரிசுகள் சிறுசுகளுக்கு முன்மாதிரியா நல்லதை பேசின இப்படிப் பேசுமே. வில்லண்டங்களை விதைச்சா வில்லண்டம் தான் அனுபவிக்க வேணும். இதுக்காக அதுகளை ஒதுக்கிப்போட்டு நீங்கள் பழைய வார்த்தைகளை கதைக்க மூளைச்சா அதுகளும் பிஞ்சில பழுத்த கதையாகிடும் பாரு.

---




## மகிழ்ச்சிகரமான திருமணவாழ்வுக்குத் தேவையான ஆயத்தப்பயிற்சிகள்

### ஆயத்தம் செய்யவரும் தம்பதிகளிடம் கற்பிப்பவர் ஆராயவேண்டிய சில குறிப்புகள்

1. மதம்:— A. இருவரும் கத்தோலிக்கரா?
   B. எவராகுதல் கத்தோலிக்கத்திற்கு மாற வேண்டியவரா?
   C. பெற்றுக்கொண்ட அருட்சாதனங்கள்.
2. அறிவு:- ஒவ்வொருவரும் படித்திருக்கும் வகுப்புக்கள மொழி, அறிவு.
3. வசதிகள்:- தொழில், பணம், இல்லிடம், பெற்றோர், சுற்றம
4. திருமணத்தின் வகை: பதிவுத் திருமணம் (வெள்ளைத் தாழ்) வார்த்தைப்பாடு (ரோஸ் தாழ்)
5. காலம்:- திருமணம் செய்யப்போகும் மாதம், திகதி.
6. இடம்:— ஊர், கோவில்
7. முறை:-இருவருக்குர் இடையில் உள்ள உறவு முறை.
8. சமமதம்:— தாங்களாக விரும்பியது, பெற்றோர், சுற்றத்தார் விருப்பப்
9. திருமணத்தின் பின்:- திருமணம் முடிந்தபின் அவர்கள் நிலைய கவழப்போகும் இடம், தொழில்.
10. திட்டம்:- தங்கள் வாழ்வில் செய்ய நினைக்கும் சில செயற்பாடுகள்.

I பிறமதத்தில் இருந்து கத்தோலிக்கத்திற்கு மாறவேண்டியவர் இருந்தால் முதலில் உலகசிருஷ்டிப்பு, ஆதிப்படைப்புக்கள், மனிதனின் வீழ்ச்சி, மீட்புத் திட்டம் என்பவற்றை விளக்குதல் அருட் சாதனங்கள் அதாவது ஞானஸ்நானம், உறுதி பூசுதல், நற்கருணை, பாவசங்கீர்த்தனம், மெய்விவாகம், பற்றிய அறிவு கொடுத்தல்.

துணையாக:- சிறுவர் வழிகாட்டி, வளர்ந்தோர் வழிகாட்டி, வேதாகமக் கதைகள், புனித லூக்காஸ் நற்செய்தி என்னும் நூல்களைக் கைக்கொள்ளலாம். பத்துக்கற்பனை, திருச்சபைக் கற்பனை, ஆன்மசரீரநற்கிரிகைகள், பரிசுத்த ஆவியின் கொடை, கனி, பூசைப்பலி, நற்கருணையின் மேன்மை பாவமன்னிப்பு, மனஸ்தாபம் என்பவற்றிற்கு உதவியான செபங்கள், மட்டில் கூடிய சவனம் செலுத்தல் மனதிற் பதியக்கூடிய படங்கள் காண்பித்தல், செபமாலை, சிலுவைப்பாதை, புனிதர்களின் வணக்கம், என்பவற்றை அறிமுகம் செய்தல்

II. கலப்புத் திருமணமாயின் இருந்தால் பங்குக் குருவானவருடன் ஆலோசனை செய்து அதற்கேற்ப திருமண ஆயத்தம் செய்தல்

III. இருவரும் கத்தோலிக்கரானால் மேலே ஆராய்ந்த பக்குப்படி முறைகளுக்கேற்ப திருமண ஆயத்தத்தைச் செய்தல்

"திருமண வாழ்வு" என்னும் புத்தகத்தைப் பாவித்து விளக்கம் கொடுத்தல். அதில் 12 அதிகாரங்கள் உண்டு தம்பதிகளின் ஆயத்தகால அவகாசத்திற்கேற் நாட்களைக் குறிப்பிட்டு அதிகாரங்களை வகுத்துக் கொள்ளலாம். 3 நாட்கள் என்கிலும் ஆயத்த நாட்கள் இருக்கவேண்டும். அப்படியாயின் 4 அதிகாரமாக ஒவ்வொரு நாளும் கற்பிக்கலாம்.

(1) திருமணத்தின் இரு பெரும் பண்புகள். அதி 5, (2) திருமணத்தின் நோக்கம். அதி. 6, (3) மணவாழ்விற் கற்பு. அதி 7, (4) திருமண ஏற்பாடுகள். அதி. 8, (5) திருமணத்தின் நிபந்தனைகள் அதி. 9, (6) திருமணத்தின் விக்கினங்கள் அதி. 10 (7) திருமணத்தின் கடமைகள் அதி. 11, (8) குடும்ப நலத் திட்டம்அதி.12, என்பன ஆழமாகக் கற்பிக்கப்படவேண்டியவை.

1, இவைகளைக் கற்பிக்கையில் வாழ்க்கை அனுபவங்களையும் பகிர்ந்துகொள்ளவேண்டும்.

2, தேவதாய், திருக்குடும்பம், புனிதர்களின் இல்லற வாழ்க்கை பற்றியும், நாம் காணக்கூடிய வகையில் இருக்கும் பொதுக்குடும்பங்கள் பற்றியும் தேவைக்கேற்ப விளக்கம் கொடுக்கவேண்டும்,

துணை நூலாக: கிறிஸ்தவ குடும்பம், திருமணம் பற்றிய திருச்சபையின் போதனை, குடும்பம் ஒரு கதம்பம் என்னும் நூல்களை, தம்பதிகள் வாசிக்கவும், விளங்கவும் உதவியளித்தல்.

— அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்வாக்கு அறிவோம்

திருமறைப்பணி நிலையம்
த. ப. இல. 2.
ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

## சிறிய இறைவாக்கினர்-21

### நாகூம் -2

நாகூம் தமது நூலில் நினிவேயின் அழிவை விபரிக்கிறார். இதில் கொடுமைப் படுத்துவோரின் பேரழிவு பற்றிச் சிறிதும் அனுதாபமின்றி, மனிதத்தன்மையின்றி நாகூம் பெருமைப்பட்டுக் கொள்வதாக இப்பகுதி தோன்றுகிறது. இந்நூலைப் படிக்கும் போது ஏறக்குறைய இருபது ஆண்டுகளாக நாகூம் ஆற்றிய இறைவாக்குப் பணியிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு சில வாக்குகளையே நூல் கொண்டிருக்கிறது இவ்வா எழுகியது நாகூமின் சீடர்களின் வேலை என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

நாகூம் இறைவன் தம் மக்களோடு செய்து கொண்ட உடன்படிக்கையை வலியுறுத்துகிறார். உடன்படிக்கைக்கு மாறாக மக்கள் நடந்து கொள்ளும்போது இறைவன் தம் மக்கள்மேல் சினம் கொள்ளுகிறார். ஆனால் அவர்களை எக்காலத்திற்கும் கைவிடமாட்டார் என்பதை உணர்த்துகிறார் அசிரியர் இஸ்ராயேலையும் யூதாவையும் பாழ்படுத்தினர், கொடுமைப் படுத்தினர். இதையெல்லாம் நாகூம் உளமார வெறுத்தார் அசிரிய அரசின் முடிவு நெருங்கியபோது நாகூம் அடக்கி வைத்திருந்த சினம் எரிமலைபோல் பொங்கி வழிகிறது.

அசீரியர்களின் கொடிய செயல்கள் இறைவனது நீதித் தீர்ப்பைக் கூவி அழைத்தன. இந்த இறைநீதிதான் நாகூமின் கண்டிக்கும் தீர்ப்பிற்கு மூலகாரணமாக அமைகின்றது இந்நூலைப்படிக்கும்போது கடுமையானபோக்கு காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது. அதேவேளை இந்நூல் இறைவனது தன்மை பற்றிய எல்லா இயல்புகளையும் கூறவில்லை என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஆனால் ஒரு உண்மை மிகத் தெளிவாகக் காணப்படுகிறது. அதாவது நேர்மையான சினம்காணப்படுகிறது இந்த நேர்மையான சினம் அவசியமானது. இறைவன் தீமையை வெறுக்கிறார். தீமைக்கு எதிராக சினம் கொள்கிறார். சினம் பரிசுத்த அன்பின் மறுபக்கமேயாகும். தீமையை வெறுக்காதவன் உண்மையிலேயே நல்லவனாக இருக்க முடியாது என்பதை நாகூமின் நினிவேயின் அழிவுபற்றிய கூற்றிலிருநது அறிந்து கொள்ள முடிகின்றது.

கி. சா. பங்கிராஸ்

அறிந்துகொள்ளுங்கள் 76

## பாவப்பரிகார நாள்

எபிரேயருக்கு எழுதிய திருமுகத்தில் 7: 27, 9 6-12 வசனங்களைப் புரிய வேண்டுமாயின் லேவியராகமம் 16:1-39 பகுதிகளைப் படிக்கவேண்டும். பாவப்பரிகார நாள் தபம் செய்யும் நாளாக உண்ணு நோன்பு இருக்க வேண்டும் இது திஸ்ரி மாதம் 10 ம் நாள் (செப்டம்பர் - அக்டோபர்) கொண்டாடப்பட்டது. இந்த நாள் குருக்களுக்காகப்பரிகாரம் செய்யும் நாளாகவும் பின மக்கள் எல்லோருடைய பாவங்களுக்குப்பரிகாரம் செய்யும் நாளாகவும் கொண்டாடப்பட்டது.

முதலில் பெரியகுரு இளம் காளையை தனக்காகவும் தன் குடும்பத்தாரின் பாவங்களுக்காகவும் ஒப்புக் கொடுத்தபின், கூடாரவாயிலில் மக்கள் கொண்டு வந்த இரு வெள்ளாடுகளையும் சீட்டுப்போட்டு ஒன்றைக்கடவுளுக்கும் மற்றதைப் பழிசுமத்தும் ஆடாகவும் ''அசசெல்'' தெரிந்தெடுப்பார். கடவுளுக்குரிய ஆட்டைப்பாவப்பலியாக ஒப்புக்கொடுத்தபின் பெரிய குரு தூபக்கலத்தை நிரப்பி எடுத்து அதி தூயகத்துக்குள் (மூலஸ்தானம்) சென்று வாசனைப்புகையைப் போட்டு இரக்கத்தின் அரியணையை மூடச் செய்வார்.

பின் இளம் காளையின் இரத்தத்தை எடுத்து இரக்கத்தின் அரியணைமீது ஏழு முறை தெளித்துப்பின் வெள்ளாட்டுஇரத்தத்தையும் இரக்கத்தின் அரியணைமீது முன் சொன்னபடி தெளிப்பார். தொடர்ந்து பரிசுத்த இடத்தில் தூபப்பீடத்திலும் வெளிமுற்றத்தில் பலிப்பீடத்தின் மேலும் இரத்தம் தெளிக்கப்பட்டுப் பரிகாரம் செய்யப்படும்'

''அசசெல்'' தீய ஆவி பாலையில் அலையும் பேய் என்று யூதர்கருதினர். ஏற்கனவே வேறு நாடுகளில் இருந்த இச்சடங்குகளை எடுத்து அதற்கு புதுப்பொருள் கொடுத்து தம் சமயவழிபாடுகளில் சேர்த்துக் கொண்டனர். பாவங்கள் சுமத்தப்பட்ட ஆட்டை வெளியே துரத்துவது மூலம் பாவங்கள் நீக்கப்பட்டது என்று எண்ணினர்.

—இ. ம. ஜெயசிலன்

## பழமொழி ஆகமமும் முதுமொழியும்.

வாசகர்களே!

நாம் மனிதனின் குறைபாடுகள்-கோட்பாடுகள் அனைத்தையும் உணர்ந்து கொண்ட போதிலும் - மனிதன் ''குறைபாடுகள்'' உள்ளவன்! என்ற பேருண்மையை நாம் உணராது செயற்படுகின்றோம்!

மனிதனின் வாயில் இருந்து வெளிப்படும் வார்த்தை, அவனின் உள்ளத்திலிருந்து வெளியேறும் சொற்கள் மூலமே!

''குடிகாரன் வாயிலும்-குழந்தைப்பிள்ளை வாயிலும், பொய் இராது'' என்றார்களே நம் முன்னோர்! காரணம்:- இவ்விரு சாராரின் மத்தியிலும் உண்மைத் தெளிவு- பூரண அறிவு இல்லை!

இதையே திருநூல் 16/27- ல் 'தீய மனிதன் தீமையே செய்ய முயற்சிக்கின்றான். அவனுடைய உதடுகளிலும், நெருப்பு பற்றி எரியும்'' என் கின்றார்கள்

நம் முன்னோர் தொடர்ந்து தரும் மற்றுமொரு முதுமொழி ''கெடுவான்- கேடு நினைப்பான்'' என்று.

நம்மைச் சார்ந்தவர்கள் என்று நாம் சொல்லிக்கொள்ளுகின்றோமே ...! அவர்களின் உண்மை உருவை நாம் அநேக தடவைகளில் கண்டு கொள்ளத் தவறி விடுகின்றோம், காரணம்? நம்பிக்கைதான்! ஆனால் அவர்களின் ''பார்வை'' எப்பொழுதும் எமது பல வீனங்களையே உற்று நோக்கிய வண்ணம் இருக்கின்றது!

நமது பலவீனத்தை எப்பொழுது கண்டு கொள்கிறார்களோ... அப்பொழுதே அவர்கள் நம்மை தாகக்கத்தொடங்குகிறார்கள.

திருநூல் தரும் பதில்:- ''அநீதனை மனிதன் - தன் அயலானை ஏமாற்றி- அவனை தன் தீய வழியில் கூட்டிச்செல்கிறான்'' என்று 16/29- ல் கூறிய இறை வார்த்தைக்கு, நம் முன்னோர் நாலு சொல்லில் நல்ல மொழி பகிர்கின்றார்! எப்படி?

''நம்ப நட-நம்பி நடவாதே'' என்று கூறியதோடு மட்டும் நின்றுவிடாது இன்னுமொரு முதுமொழியையும், உரைக்கின்றார்! இது ஈனமாக-இழிவாக இருந்தாலும், அசை போட்டுப் பார்க்க வேண்டிய தொன்று.

''பன்றியோடு கூடிய நாய் -- றும்- மலம் தின்னும்'' என்று.

நீங்கள் நம்பியவர்கள் உங்களுக்கு குழி பறிக்க முனையும் போது, திருநூல் தரும் அறிவுரைகளையும் — நம் முன்னோர் கூறும் அறிவுரைகளையும் சிந்திக்க மறவாதீர்கள்!

### வாரம் ஒரு சிந்தனை

''குழந்தையோடு நீ பழக நேர்ந்தாலும் அதன் குணம் அறிந்து பழகு,

உங்கள் அன்பன்

எஸ். ஏ. நாதர்.

# காவலன் கண்மணிகள்

ஒளி: 3 சுடர்: 19 | எம் விழிகளின் ஒளி யேசு எம் வாழ்வின் வழி யேசு

### வாரம் ஒரு வார்த்தை

எனக்கு அடைக்கலமும்
என் மீட்பரும் ஆண்டவரே (சங். 18: 14.)

### அங்கத்துவம்

151. M. J. வின்ஸிப் ஆண்டு 9.
யாழ். மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்.

152. ஜெ. லோகநாதன் ஆண்டு 9.
புனித சாள்ஸ் ம. வி., யாழ்ப்பாணம்.

### தம்பி! தங்கையே !! நீ...நீ?

★ ஆபிரகாம் கடவுளின் விருப்பப்படி பாலைவனத்திற்குச் செல்லும் பொருட்டு தாம் வாழ்ந்த வளமிக்க நாட்டைத் துறந்தார்.

★ ஆமோஸ் இறைவாக்கு அருளி மக்களை மனந்திருப்பும் பொருட்டு தனது வாழ்க்கையைத் தியாகம் செய்தார்.

★ அருளப்பரும், யாகப்பரும் கிறிஸ்துவின் பொருட்டுத் தங்கள் தொழிலைத் தியாகம் செய்தனர்.

★ அரிமத்தியா சூசை கிறிஸ்துவுக்காக தமது கல்லறையைத் தியாகம் செய்தார்.

★ முடியப்பர் தமது உயிரையே கிறிஸ்துவுக்காகத் துறந்தார்.

★ இராயப்பர் கிறிஸ்துவுக்காக அனைத்தையும் தியாகம் செய்தார்

★ கிறிஸ்துவுக்காக அனைத்தையுமே இழந்தவர், இழக்கத் தயாராக இருப்பர். இவ்வுலகில் எத்தனை பேர்? கணக்கிட முடியுமா? முடியாது? தம்பி! தங்கையே !!...நீ...நீ?

எ. த. ஜெனிவி பெர்னாண்டோ அங். எண்: 137.

### சொல்லுங்கள் பார்ப்போம்: யார் இவர்?

ஞாயிறில்: பிறந்தார்.

திங்களில்: முதல் முறையாக ஜனாதிபதியாகத் தெரிவானார்

செவ்வாயில்: மீண்டும் ஜனாதிபதியானார்.

புதனில்: வழக்கறிஞராகப் பதிவு செய்து கொண்டார்.

வியாழனில்: பிரசித்தி பெற்ற கெட்டிஸ்பார்க் உரையாற்றினார்.

வெள்ளியில்: சுடப்பட்டார்.

சனியில்: உயிர் நீத்தார்.

யார் இவர் எனச் சொல்லுங்கள் பார்ப்போம்?
விடை அடுத்த சுடரில் வரும்.

### அழைப்பின் தொனி

(தொடர்ச்சி)

விண்ணரசை பற்றிய
நற்செய்தியை
விடுத்தார் செபக்கூட
மெங்குமே
ஆயனில்லா மந்தை
மக்களையும்
கருணைக் கண்களினால்
நோக்கினாராம்

பாவிகளை மனந்திருப்பி
அழைப்பதற்காக
தம் சீடர் பக்கம் திரும்
பினாராம்
பணியாளர் தேவை என்று
மன்றாடும்படியாக
சீடர்களை நோக்கி
மொழிந்தாராம்

அழைப்பின் மைந்தன்
யேசுவுமே
அழைத்துக்கொண்டே
இருந்தாராம்,
இன்னும் சீடர்களை அழைத்து
பாவிகளின் குறை போக்க
அனுப்பினாராம்

ஒருநாள் யேசுவின் போதனை
யின் விருப்பினால்,
பெண்கள் சிறுவர்கள்
நீங்கலாக
ஆண்களின் தொகையும்
ஐயாயிரம்
இறைபோதிப்பின் சுவை
அழைப்பினிலே.

(அடுத்த சுடரில் தொடரும்.) தீ. சந்தியோகு அங். எண். A.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுதிச் செபியுங்கள் போட்டி - 24

''திரு இருதயப் பக்தி வளர''

ஒருசெபம் எழுதி 7-6-89 இற்குமுன் பாதுகாவலன்த, பெ. இல. 2. யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள். சிறந்த செபத்திற்கு பரிசு ரூபா/- 25/- அடுத்த போட்டியும் பரிசு பெறுபவர் பெயரும் 16-6-89இல் வெளிவரும்

பரிசுபெறும் செபம்

அன்புத் தந்தையே!

எம் சிறிய நாடு அனுபவிக்கும் இன்னல்களைக் கருணைக் கண்கொண்டு பாரும். எம் நாட்டில் நிலவும் இச்சூழ்நிலையினைச் சாதகமாக்கி பல விதங்களில் இலாபம் சம்பாதிக்கப் புறப்பட்டவர்கள் மத்தியில் உம் ஊழியன் ''யோசவ் வாஸ்'' இனங்களுக்கிடையேயான உறவு பிளவுபடாதிருக்க ஆற்றிய அரும்பணிகளை கடைக்கண் நோக்கும்.

''தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கிடைக்கப்படும் என்று கூறிய அன்புத் தந்தையே! உம் அன்பு மக்கள் நாம் தட்டுகிறோம், கேட்கிறோம். அல்லலுறும் எம் நாட்டிலும் சமாதானத்தை நிலைநாட்டி, இறை வார்த்தையில் ஒழுகி சமாதானத்தை நிலைநாட்ட அரும்பணி புரிந்த உம் ஊழியன் ''யோசவ் வாஸ்'' புனிதராக கிறிஸ்தவ உலகமே போற்றித் துதிக்க தேவையான புதுமை நிறைவேறவும், தொழிலாளி ஒருவனின் வியர்வை வற்றுமுன் அவனது ஊதியத்தை வழங்கவேண்டுமென திருவாய் மொழிந்த அன்பு இறைவா! உம் ஊழியன் ஆற்றிய அரும்பணிகள் எம் மத்தியில் நிழலாடும் இத்தருணத்தில் சமாதானம் என்னும் அருங்கொடை எம் மத்தியில் ஒளி வீசி ''யோசவ் வாஸ்'' முனிவர் புனிதர் பட்டியலில் இடம்பெறவும், இலங்கைத் திருச்சபையும் ஒரு புனிதரை உருவாக்கிய பணி சமைத்ததாக வேண்டுமெனவும் இறைவா உம்மை இறைஞ்சுகின்றோம்.

செல்வி:- ஜெனிற்ரு அன்ரனிராஜா
பத்தமேனி, அச்சுவேலி

பாராட்டுப் பெறுவோர்:

1. வி மேரி பற்றீசியா, 2. டி, இ. ரட்ணராஜ், 3. திருமதி யேசுதாசன், 4. ஆ. ஜோஜினி, 5. பி. வசந்தா குருஸ் 6. ஆன் பெலிசிற்ரு பிகிராடோ, 7. பே. தேவரஞ்சினி, 8. ம. றெஜீனு லின்ரா, 9. அ. மோசேஸ் தேவரத்தினம், 10. அ. சாந்தினி, 11. யோ. நீக்கிலஸ் ஜெசான், 12. ச. மேரி அமுதா, 13. வே. பிரான்சிஸ் பேரின்பநாயகம், 14. ம. மேரி றஞ்சினி, 15. யேசுதாசன்.

பரிசுபெறும் நற்பேருளர்

செல்வி:- ஜெனிற்ரு அன்ரனிராஜா
பத்மமேனி, அச்சுவேலி.

---

குறுக்கெழுத்துப்போட்டி...... (3ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரன் கில்பேட் 42.) ம. நிர்மலமரியா 43,) மேரி விறிசித்தா 44.) இ. டினேஸ் 45.) எறிக் யோசப் 46.) பி. ஜோண்சன் 47.) எஸ். சாமினி 48.) அந்தோனிப்பிள்ளை டொறின்

### இளவாலை மறைவட்டம்

1.) ஜக்குலின் சூசைதாசன், 2.) ஏ. நிலா, 3.) ச.மரியானு சுகந்தி, 4.) எம். ஜெபேட், 5.) அன்ரனி ஜெறோம், (6. இ. யோசப் மக்சிமஸ் 7.) டே. நிர்மலா 8.) வனஜா அந்தோனிப்பிள்ளை 9,) கி.மல்லிகா, 10.) லூ. அன்ரன் லீயோ11.) பி. ஏ. கிறிஸ்ரி 12.) லோ. றூபபிளஸ், 13.) ஜே. கே. றெமி 14.) லெ. டே. செல்வ சுதர்சன் 15.) அ. டொமிற்றில்லா சாந்தா 16.) ஜி. யூட் டிரோன் 17.) மேரிமலர் மரியாம்பிள்ளை 18.) அ.ரமணி 19.) செல்வநாயகம் மரியநாயகம், 20.) வேதநாயகம் கிங்ஸ்லி குமார் 21.) ச. நீ. மதிவதனன், 22.) கிசிங்ரன் மரியநாயகம் 23.) ஆ. மரிய இமாக்லெற் அகிலா 24.) வி.அன்ரனற் அனுபா 25.) கிறிஸ்ரின் கமலரூஜி 26.) அ. மேரி ஸ்ரீபெனு 27.) அ. றிச்சாட் நியூமன் 28.) சா. ப. போல் அமல்ரூஜ் 29.) டெடா றிச்சாட் 30.) நிர்மலா அந்தோனிப்பிள்ளை 31.) ம. ஜெயந்திரன் 32,) ஆ. சாள்ஸ் பெனற் 33.) சூ. நெல்சி.

### பிற மறைவட்டங்கள்

1.) இம்மானுவேல் புஸ்பமேரி 2.) ஜே. லூட்ஸ் 3.)இனசென்சியா 4.) யோசவான். 5.) ஹெலன் 6.) பீ. மெற்றில்டா வசந்தி 7.) ச. என்சலா மேரி 8.) டே. ஜோசப் மேரி 9.) அ. கபிரியேல் 10.) ஏ. நோபட் பர்னூண்டோ 11.) ஆர். ஜோசப் ஜெயகாந்தன் (12. பெஸ்டியன் கிறிஸ்டினு

### திருகோணமலை - மட்டக்களப்பு மறைவட்டம்

1). கே. கோமதிராஜ் 2.) த. தங்கராணி 3.) த. ஸ்கொலஸ்டிக்கா 4.) நடராசா அலிஸ் லூர்த்துமலர்

பரிசிபெறும் அதிஷ்டசாலி

செல்வி ம. மேரி றஞ்சினி
வெளிச்சவீட்டு ஒழுங்கை, தும்பளை. பருத்தித்துறை.

---

### விண்ணக வாழ்வின் ஆறும் வருடம்



மனுவல் பத்திநாதர்
அன்னையின் மடியில்
18 01-1931
இறைவன் அடியில்
17-05-1983

அன்புத்தலைவா!
அரியநற்தந்தாய்
ஆறுத்துயரில் அழுது
புலம்புகின்றோம்
எம்முடன் வாழ்ந்த
இனிய நற்காலங்கள்
பண்புடன் பகிர்ந்த
பல்வகைச் சேவைகள்
அருளோடுரைத்த அரிய
நல் மொழிகள்
அனைத்தும் இழந்து
ஆண்டுகள் ஆறுகியதோ.

17-05-1989 புதன்கிழமை காலை 5. 30 மணிக்கு யாழ். புனித யாகப்பர் ஆலயத்தில் அன்னாரது ஆத்தும சாந்திக்காக ஒப்புக்கொடுக்கும் இரங்கற் பலியில் பங்கு கொண்டு செபிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

இவரின் பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், மாமியார்.
2- அடப்பன் வீதி
யாழ்ப்பாணம்

A/93

---

### 31-ஆம் நாள் நினைவு அஞ்சலி



அந்தோனிமுத்து செபமாலை
மாணிக்கமுத்து
மலர்வு 02-06-1913
மறைவு 15-04-1989

ஒரு மாத காலம் ஓடிமறைந்தாலும் பாராது உன்முகம் நாம் தவித்தாலும் எந்நாளும் உம்மை மறவோம் ஐயா. எப்பொழுதும் உமக்காய் வேண்டுகின்றோம் ஐயா.

இவரின் ஆன்மா சாந்தி பெற மண்டைதீவு புனித இராயப்பர் ஆலயத்தில் 15-05-89 திங்கள் காலை 6.30 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இத்திருப்பலியில் பங்குபற்றி இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக மன்றுடுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றுர் உறவினர்.
4-ம் வட்டாரம்
மண்டைதீவு

A/90

---

### விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திரு. சவிரிமுத்து அம்புறோஸ்
அன்னை மடியில்: 24-01-1924
ஆண்டவன் அடியில்: 14-05-1988

அன்பின் இறைவா உம் அருட்பெருங் கொடையால் இவ்வுலக இன்பதுன்பங்களிலெல்லாம் உமக்கே சான்று பகிர்ந்து அன்புக்கோர் இருப்பிடமாக நற் பண்பிற்கோர் உறைவிடமாக பொறுமைக்கோர் பிறப்பிடமாக வாழ்ந்து உமதண்டை வந்தருளிய அடியான் அம்புறோசின் பாவங்களை மன்னித்து நித்திய ஒளியில் சேர்த்தருளும். நாங்கள் செய்கின்ற பக்தியான மன்றாட்டினால் இவரின் ஆன்மா சாந்தியடையச் செய்தருளும்.

இவரின் ஆன்ம சாந்திக்காக 14-05-1989 ஞாயிறு காலை 7-00 மணிக்கு யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் இரங்கல்திருப்பலியில் பங்கு பற்றி அவரின் ஆன்ம சாந்திக்காக செபிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இவர் பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள். மருமக்கள்,
பேரப் ள்ளைகள்,
151, 4-ம் குறுக்கு தெரு
யாழ்ப்பாணம்.

---

### விண்ணக வாழ்வின் 9-ம் ஆண்டு நினைவு



திருமதி. பத்மாவதி சவிரிமுத்து
தாயின்மடியில்: 01-11-1934
இறைவனடியில் 10-05-1980

நேசத்தோடு எமை ஈன்று
பாசத்தோடு எமை வளர்த்த
அன்பின் தாயே!
ஆண்டுகள் ஒன்பது
மறைந்தாலும்
அம்மா உன் பிரிவை
மறப்போமோ
பாசங்கள் தனை மறந்து
விண்ணகம் சென்ற நீ
எங்களுக்காய் வேண்டுவது
என் வாழ்வில் மிளிருதம்மா
உந்தனுக்காய் நாம் செய்யும்
நன்றிக்கடன் இதுதானம்மா
உன் ஆன்மா சாந்தியடைய
இறைவனை நாம் வேண்டுகின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்
கணவன், மகன், மகள், தாய்,
சகோதரங்கள், மைத்துனர்கள்.
ஆனைக்கோட்டை.

A/95

---

### 31-ம் நாள் நினைவஞ்சலி



விக்ரர் இம்மனுவல்
அன்னை மடியில்: 21-04-61
ஆண்டவன் அடியில்: 12-04-89

'' என்னை விசுவசிப்பவன் இறப்பினும் வாழ்வான் ''

என்றுரைத்தவரே இந்த நம்பிக்கையில் இறந்து போன விக்ரர் இம்மானுவேலை உமது உயிர்த்தெழுதலில் பங்கடையச் செய்வீராக!

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக சில்லாலை கதிரை மாதா ஆலயத்தில் 13-05-89 காலை 6-00 மணிக்கு இரங்கற் பூசை ஒப்புக்கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும்
தந்தை, தாய், சகோதரர்,
சகோதரி, மைத்துனர், மருமகள், உற்றுர், உறவினர்,
யாழ். சர்வோதய நண்பர்கள்.
வண. யோசவாஸ் வீதி
சில்லாலை
பண்டத்தரிப்பு

A/96

---

### காவியத்....

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

பதிலாக நாமே களிப்படைகின்றோமே'' என வியக்கவைத்தது.

இவள் எனக்கே மனைவியாக வரவேண்டும் என்கின்ற உளக்கிளர்ச்சியை அங்கிருந்தவர்களிடையே ஏற்படுத்தாது ''இவளைமண முடிக்கத்தகுதியானவன்மாதவன் அல்லது வானவனுகத்தான் இருப்பான்'' என்று தம்மையே தாழ்த்திக் கொள்ளச் செய்தது.

---

எவர் சில்வர் தயாரிப்புகள்

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டவற்றிலும் பார்க்க தரமாகவும். மலிவாகவும் தயாரிக்கப்பட்ட Rajz Brand தேவநற்கருணைப் பாத்திரம் (Ciborium), இரசப் பாத்திரம் (Chalice), தேவநற்கருணைத் தட்டு, காணிக்கைப் பை, பீட அலங்கார விளக்குகள், பூ ஏந்தனங்கள் தூண்டா மணி விளக்குகள், தேவநற்கருணைக் கூடு (Tabernacle) இன்னும் பற்பல. காட்சிஅறை:- S. A. தேவதாசன், சூராவத்தை, சுன்னுகம்.

---

### சரியான விடைகள்

குறுக்கெழுத்துப் போட்டி 10இன் சரியான விடைகள் அடுத்த போட்டியுடன் வெளிவரும்.

---



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பாதுகாவலன்
PATHUKAVALAN

## பாரினில் தாய்க்குப் பணிவுடன் சமர்ப்பணம்

வைகாசி மாதம் 6-ம் திகதி பண்டத்தரிப்பு பத்திமாமாதாவின் மூன்ருவது நவநாள் போயிட்டி, மாரீசன்கூடல், சகாயபுரம் ஆகிய பங்கு மக்களால் நடாத்தப்பட்டது. நவநாட்களில் ஒன்று எமது பங்குகளுக்கென எமது பங்குத்தந்தையின் உதவியால் மூன்று வருடங்களாக ஒதுக்கிவைக்கப் பட்டுள்ளது. இதையிட்டு அவரின் பங்கு மக்கள் பெருமை அடைகின்ருர்கள்.

பத்திமாமாதாவின் நவநாள் 5.30 மணிக்கு செபமாலையுடன் ஆரம்பமாகியது. அருள்தந்தை துரம், யேசுதாஸ், பங்கிராஸ் ஆகியோரால் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. அருள் தந்தை பங்கிராஸ் அறிவுரை கூறினுர். அவர் "2000 ஆண்டுகளுக்கு முன் இளைஞன் இயேசு வாழ்ந்ததாகவும் அவன் தன் கடமைகளை சரிவர நிறைவேற்றினுன். ஆனுல் அவனின் வழித்தோன்றலில் வந்து பிறந்திருக்கும் தற்போதைய இளைஞர்கள் அவனுக்கு மாருக வாழ்கிருர்கள் என்றும் ஓர் இளைஞன் தன் துன்பத்தை மறக்க போதைவஸ்தோ, மதுபானங்களோ பாவிப்பது மடமை அது அவனுக்கு நிம்மதியை அளிக்காது அது அவனைக் கோழை ஆக்குகிறது இதற்கு மாருக அவன் தன் துன்பத்தை குருக்கள், கன்னியர்கள், ஆசிரியர்கள், பெற்ருேர், பெரியோருக்கு அறிவித்து தன் வாழ்வில் நிம்மதியைப் பெற வேண்டும். இவர்களின் அறிவுரை அவனை முழு மனிதனுக்கும் என்று இளைஞர் யுவதிகளுக்கு அறிவுரை கூறி இவர்கள் தம் வாழ்வில் தீய செயல்களை எரித்து நல்லவற்றை விதைத்து அவற்றிற்கு நீர் ஊற்றி, அவற்றை வளர்க்க வேண்டும் என்று கூறினுர்.

கயித்தாம்பிள்ளை ஜெயமதி
போயிட்டி
இளவாலை

## புதுக்குடியிருப்பில் மறை ஆசிரியர்கள் ஒன்றுகூடல்

புதுக்குடியிருப்பில் மறையாசிரியர்களுக்கான 3 நாள் கருத்தரங்கு கடந்த மாதம் 17-ம், 18-ம், 19-ம், திகதிகளில் புதுக்குடியிருப்பு றே. க. வித்தியாலயத்தில் நடைபெற்றது. மறையாசிரியர்கள் திரு. ஆரோக்கியநாதர், திரு. பங்கிராஸ் ஆகியோர், வேதாகமம், மறையாசிரியர்களின் பணி, மறைக்கல்வியின் அவசியம், மறைக்கல்வி கற்பிக்கும் முறை என்பன பற்றி தெளிவாக, விரிவாக, விரிவுரைகள், கலந்துரையாடல்கள், செய்முறைகள் மூலம் மறையாசிரியர்களை வழிநடத்தினர். இதேவேளை 17, 18, 19-ம் திகதிகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு புதுநகர் வந்த மானிப்பாய் பங்கு மறையாசிரியர்களும் இக் கருத்தரஙகில் கலந்து கொண்டதோடு, இரு பங்கு மறையாசிரியர்களும் தத்தமது அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டனர். 18-ம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு இருபங்கு மறையாசிரியர்களுக்குமான விசேட அர்ப்பணிப்பு திருப்பலி அருள்தந்தை ஜெபரட்ணம் மாணிப்பாய் உதவிப் பங்குத்தந்தை அருள் திரு. லோறன்ஸ் ஆகியோரால் ஒப்புக்கொடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து வேதாகமத்தை மையமாக வைத்து கலாசார நிகழ்ச்சிகளும் இடம் பெற்றது. 19-ம் திகதி புதன் கிழமை காலை 6-30 மணிக்கு மல்லிகைத்தீவு புனித அந்தோனியார் ஆலயத்தில் அனைத்து மறையாசிரிர்யகளையும் ஒப்புக் கொடுக்கும் விசேடதிருப்பலி இடம்பெற்றது.

தகவல்: புனிதா

### செம்பியன்பற்று
## புனித பிலிப்பு நேரியார்
### திருவிழா நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| மே 17 | கொடியேற்றம் மாலை 6-00 மணிக்கு செபமாலை, திருப்பலி, மறையுரை. |
| மே 18—24 | தினமும் மாலை 6-00 மணிக்கு செபமாலை, திருப்பலி, மறையுரை. |
| மே 25 | நற்கருணை நாள். |
| மே 26 | காலை 7-00 மணிக்கு திருநாள் திருப்பலியும், திருச்சுருபப் பவனியும். |

A/97 பங்குத்தந்தை

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1989-ம் ஆண்டு மே மாதம் 12ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது
பதிவு இல: QB / 1001/58/81

## பதுளைப் பங்கில் இளைஞர் வாரம்

பதுளை மறைவட்டம் இளைய தலைமுறையாம் இளைஞர்க்கென தனி வாரத்தினை ஒழுங்கு செய்து, இளைஞர் விழாவொன்றினைக் கொண்டாடி மகிழ்ந்தது. கடந்த சித்திரைத் திங்கள் 19-ம் திகதி முதல், 23-ம் திகதி வரையும் இளைஞர் வாரமாக, ஏற்படுத்தப்பட்டு, அத்தினங்களில் பிரத்தியேகமாக விளையாட்டு, சிரமதானம், புண்ணிய முயற்சிகளில் இளைஞர் யாவரும் ஒருசேர ஒன்றிணைந்து காணப்பட்டமை மன நிறைவுடன் கூடிய, மகிழ்வினைத் தருவதாக அமைந்திருந்தது. பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் மூலம் மலையக யுவன், யுவதியரை ஒன்று சேர்த்து, அவர்களே அறியாத வண்ணம், அவர்களுள் துயில் கொண்டிருந்த ஆற்றல்களையும், திறமைகளையும் தட்டியெழுப்பி வெளிக்கொணரச் செய்தமை, நிச்சயமாய் இரு கரம் நீட்டி வரவேற்கக் கூடிய தொன்றே. கால்பந்தாட்டம், கரபந்தாட்டம் போன்ற விளையாட்டுகள் பதுளைப் பங்கிற்குச் சொந்தமான தோட்ட இளைஞர்களுக்கும், பதுளை நகர இளைஞர்களுக்கும் இடையில் நடைபெற்றன. 'தோட்ட இளைஞர்கள் தாம் எந்த விதத்திலும், நகர இளைஞர்களுக்குச் சளைத்தவர்கள் அல்லர்,' என்பதனை இவ்விளையாட்டுகளில் வெற்றியீட்டியதன் மூலம் நிரூபித்துக் காட்டினர். இவற்றைவிட டேபிள் டெனிஸ், இளைஞர்களுக்கிடையிலும், வலைப் பந்தாட்டம் யுவதிகளுக்கிடையிலும், பூப்பந்தாட்டம் இருபாலாருக்கிடையிலும் நடைபெற்றது. இவற்றுக்கான பயிற்சிகளை உதவிப் பங்குத்தந்தை அருள்திரு. வ. இக்னேஷியஸ் அடிகளால் வானிலை நோக்காது, தம் மெய்வருத்தம் பாராது அளிக்கப்பட்டமை நன்றியுடன் நினைவு கூரத் தக்கதாகும்.

இளைஞர் வாரத்தின் இறுதி நாளான 22-ம் திகதி ஞாயிறன்று ஓர் விசேட பாடல் பூஜையொன்றினையும் இளைஞர் குழாம் இறைவனுக்குக் காணிக்கையாக்கியது. திருப்பலியில் நிறைவாகப் பங்கேற்ற இளைஞர்களுக்குப் பங்குத் தந்தை அருள்திரு. இராஜநாயகம் அடிகளாரால் அருள் மிக்க அருளுரையொன்றும் ஆற்றப்பட்டது. 'இளைஞர்களை அவர்களது வலிமை, ஆற்றல், திறமைகளோடு மாத்திரமல்லாது அவர்களது சொந்த பலவீனங்களோடேகூட ஏற்றுக்கொள்ள வேண்டும்', எனும் அவர்கருத்து உள்ளமதை உருகச்செய்வதாயிருந்தது.

'இளைஞர்களை உருவாக்கும் உன்னத பணி குருக்களைவிட, மறையாசிரியர்களை விட, பெற்ருேர்களுக்கே முக்கியமாக உரியதென்றும், பெற்ருேரே இளைஞர்களை வலிமை மிக்க, ஆற்றல் மிக்க இளைஞராக உருவாக்க வேண்டுமென்றும், இவ்விளைய பருவத்தில் இளைஞரை நன்னெறிப் படுத்த யாதொரு முயற்சிகளையும் எடுக்காது, இளமைப் பருவம் முடிந்த பின்னர் பெற்ருேர் எடுக்கும் கரிசனையானது பட்ட மரத்திற்குப் பசளையிடுவதைப் போன்றதென்றும், எனவே இன்றே இப்பொழுதே பெற்ருேர் விழிப்புணர்ச்சியுடன் இளைய சமுதாயத்தினர் மட்டில் அக்கறை கொண்டிட வேண்டுமென்றும் அன்புக் கட்டளை விடுத்தார்.

இளைஞர் ஒன்று கூடலும், விருந்துபசாரமும், விளையாட்டில் பங்கு பற்றியோர்க்குப் பரிசு வழங்கலும் நடைபெற்றது. இளைஞரின் இனியவேண்டுகோளுக்கிணங்க பங்குத்தந்தையால் 'புனித அலோஷியஸ் இளைஞர் குழாம்' எனும் நாமகரணமும் சூட்டப்பட்டது. இவ்விளைஞர் குழாம் என்றும் இளமைத் துடிப்புடன் காரியமாற்ற அவரது ஆசீர் என்றும் நிறைந்திருக்கும், எனும் மனம் நிறைந்த வாழ்த்தும் கிடைக்கப் பெற்றது.

இளைஞர் வழிதவறி, நெறி தவறிச் செல்லக்கூடிய வாய்ப்பு பெரிதும் நிலவும் இக்காலப் பகுதியில், இளைஞர்களைத் தம் அன்பாலும், சமயோசிதத்தாலும் ஒன்றிணைத்த அருள் தந்தையரின் இப்பணி, இளைஞர்க்கென இவ்வித ஏற்பாடுகளை இதுவரையில் செய்திராத ஏனைய மறை வட்டங்களுக்கு ஓர் உத்தம எடுத்துக் காட்டு என்பதில் கிஞ்சித்தும் ஐயமில்லை.

திரட்டு: செல்வி இந்திரா

## நெஞ்சில்நிறைந்த அருட் சகோ. R.L. றெபேட் எஸ்.எஸ்.ஜே.

பிறப்புண்டேல் இறப்புண்டென்பது இறை நியதி. எனினும் ஒருவரது பிரிவால் துயர் அனுபவிப்பவர்களது தொகையைக் கொண்டு அன்னுர் தனக்கென வாழாப் பிறர்க்கென வாழ்ந்த பெருமையாளர் என நாம் மதிப்பீடு செய்யலாம். புனித வளனுர் துறவறசபையைச் சேர்ந்த அருள்சகோ. றெபேட் அவர்களின் திடீர் மரணம் திருமலை—மட்டுநகர் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அனைவரையும் இனமத வேறுபாடின்றி ஆழ்ந்த கவலையில் ஆழ்த்தியது.

இறையன்பிலும் விசுவாசத்திலும் நிறைந்து இல்லறத்தை இனிதே நடத்திய காங்கேசன் துறை புனித அந்தோனியார் பங்கைச்சேர்ந்த காலம் சென்ற திரு. திருமதி இரபாயேல் தம்பதிகளின் மூத்த புதல்வர்தான் அருள்சகோ. றெபேட் அவர்கள். மலேசியாவில் பிறந்த இவர் தமது கல்வியை காங்கேசன்துறை றே. க. பாடசாலை, நடேஸ்வராக்கல்லூரி, இளவாலை புனித என்றியரசர் கல்லூரி ஆகியவைகளில் கற்று இறையழைத்தலை ஏற்று புனித வளனுர் சபையில் சேர்ந்து துறவியானுர். சிறந்த ஆசிரியனுய் பண்பாளனுய் மட்டக்களப்பு, இரத்தினபுரி, திருமலை, கல்முனை ஆகிய இடங்களில் பணியாற்றி இளைப்பாறிய பின்பும் அனுதை இல்லம், மாணவர் விடுதிப் பொறுப்பாளர் போன்ற வேறு பல பதவிகளையும் ஏற்றுச் சிறப்பாகப் பணியாற்றினுர். "அன்பர் பணி செய்ய எனை ஆளாக்கி விட்டு விட்டால் இன்பநிலை தானே வந்தெய்தும்- பராபரமே" என்பதற்கு ஒப்பப் பல்வேறு மக்களிடையே இன மத வேறுபாடின்றி "மக்கள் சேவையே மகேசன் சேவை" என வாழ்வாங்கு வாழ்ந்தார்.

இவருடைய ஏனைய சகோதரிகள் இருவர் திருக்குடும்பக் கன்னியர்கள். அருள் செல்வி வில்லி நீற்ரு தற்போது தென் ஆபிரிக்காவில் மறைபணி புரிகின்ருர். அருள் செல்வி மேரி செலஸ்ரினு வங்காலைத் திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் பணியாற்றுகின்ருர்.

அனுதைகட்கு ஆதரவாளனுய், தூய உள்ளம் கொண்ட தொண்டனுய்த் திகழ்ந்த அருள்சகோ. றெபேட் இறைவனடி சேர்ந்துவிட்டார். அன்னுரின் ஆன்மா சாந்தி அடைவதாக.

புலவர். A. W. அரியநாயகம்
நெடுநகர்

## குருவானவரின் கொலைபற்றி விசாரணை

யோக்கோஹாமா மறை வட்டத்திலுள்ள யூறிகவோக்கா என்னுமிடத்தில் கடந்த மார்ச் 31-ம் திகதி கொலை செய்யப்பட்ட குவெபெக் மறைபரப்பு சபைக் குருவான பிதா ஆமண்ட் போயிவேட் என்பவரின் கொலை தொடர்பாக விசாரணைகள் நடைபெறுகின்றன.

தமது ஆலயத்தில் மூன்ருவது மாடியில் வசித்துவந்த இவர் அன்று காலை திருப்பலிக்கு வராதது கண்டு சில கன்னியர்கள் ஒரு பெண்ணை அனுப்பியபோது கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் அவர் கொலையுண்டிருந்தது கண்டு பிடிக்கப்பட்டது. அறை முழுவதும் புரட்டப்பட்டிருந்தமையால் களவே கொலையின் நோக்கமாகப் இருக்கலாம் எனபொலிசார் சந்தேகப்படுகின்றனர்.

பெப்ரவரி மாதத்திலும், அவரது அறையிலிருந்து சில பொருள்கள் திருட்டுப் போயின,

1950-ல் அந்நாட்டுக்கு வந்த பிதா போயிவேட் தமது நற்பண்புகளால் மக்களின் அன்புக்கு இலக்கானவர் இறக்கும் போது அவருக்கு வயது 68.

குவெபெக் சபையைச் சேர்ந்த 28குருவானவர்கள் ஜப்பானில் பல பாகங்களில் பணி புரிந்து வருகிருர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org